අධ්‍යාපන අමාත්‍යාංශය
නිපුණතා සංවර්ධන, වෘත්තීය අධ්‍යාපන, පර්යේෂණ හා නව නිපැයුම් අංශය
கல்வி அமைச்சு
திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு
Ministry of Education
Skills Development, Vocational Education, Research and Innovation Division
ජාතික ආධුනිකත්ව සහ කාර්මික පුහුණු කිරීම් අධිකාරිය
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
National Apprentice & Industrial Training Authority

2022

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT

971. ශ්‍රී ජයවර්ධනපුර මාවත, වැලිකඩ, රාජගිරිය.
971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,வெலிக்கடை, இராஜகிரிய.
971, Sri Jayawardanapura Mawatha, Welikada, Rajagiriya

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

வருடாந்த அறிக்கை

2022

உள்ளடக்கம்

தலைவரின் செய்தி	01
நோக்கு மற்றும் செயற்பணி	02
அதிகாரசபையின் நோக்கங்கள்	03
அதிகாரசபையின் பிரதான பணிகள்	03
அறிமுகம்	04
நிர்வாகச் சபை	05
பணிப்பாளர் சபை அதிகாரிகள்	07
மாவட்ட முகாமையாளர்கள்	08
நிர்வாகக் கட்டமைப்பு	09
தரவு வெளிப்படுத்தலும் ஆய்வும்	10
விசேட நிகழ்ச்சித் திட்டங்களும் தகவல்களும்	25
2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்டங்களும் இலக்குகளும்	28
இறுதி கணக்கு அறிக்கைகள்	30
கணக்காய்வு அறிக்கைகள	39

தலைவரின் செய்தி.....



அரை நூற்றாண்டினைக் கடந்து 51 ஆண்டுகள் பெருமையுடன் பயணிக்கும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையானது 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கங் கொண்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் கீழ் பயிற்சி நடவடிக்கைகள் பரந்தளவில் ஆரம்பிக்கப்பட்டன.

தேசத்தின் பிள்ளைகள் தொழிற்கல்வி பயிற்சி துறையில் திறமையானவர்களாகத் திகழவும், இவ்வாண்டில் ஏஞ - சீடு முறையின் ஊடாக இலங்கையில் தொழில்சார் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு வெளிநாட்டில் தொழிலை பெற்றுக் கொடுக்கும் பணிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. தொழில்சார் நிபுணத்துவம் மட்டுமன்றி எம்மால் வெளிநாட்டுச் சந்தைக்கு பொருத்தமான மொழித் திறனை வழங்கும் பணியையும் இவ்வாண்டில் ஆரம்பித்து அதன்படி யப்பான் மற்றும் கொரியா ஆகிய மொழியறிவை பெற்றுக் கொடுக்கும் பணியானது ஆரம்பிக்கப்பட்டது.

எமது நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையில் தொழில் மேம்படுத்தலை நோக்கமாகக் கொண்டு லக் ரஜய மற்றும் அவுஸ்திரேலியா அரசும் ஒன்றிணைந்து அவுஸ்திரேலியா அரசின் நன்கொடையின் கீழ் செயற்படும் ளுமடைடள கழச ஐஒடரளளைந புசழறவா (ளு4ஐபு) நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தலும், தகவல் தொழில்நுட்ப பிரிவில் வெப் மற்றும் பயன்பாட்டு மொழியறிவை விருத்தி செய்வதற்கும், தனியார் வைத்தியசாலை துறைக்கு அவசியமான தேர்ச்சிமிக்கவர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு எமது அதிகார சபை இவ் ஆண்டில் பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொண்டது. அது மட்டுமன்றி தனியார் வைத்தியசாலைகளின் செவிலியர் சேவைகள் சங்கமும் (யீரே) தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் (ரீர்ளுசுஊ) இணைந்து ஒழுங்கமைக்கப்பட்ட தனியார் துறைக்கு அவசியமான தாதியர் பணிக்குழுவிற்கு பயிற்சியளித்து தாதியர் டிப்ளோமா டீஏஞ6ரூ பாடநெறியின் மூன்றாவது குழுவிற்கான ஆட்சேர்ப்பும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

அழகுக் கலை துறை என்பது தற்போதைய காலகட்டத்தில் இளைஞர் யுவதிகள் அதிக ஆர்வம் காட்டும் துறையாகும். இங்கு சிகையலங்கார தேர்ச்சியாளர்களை உருவாக்குவதற்காக தனியார் துறையுடன் இணைந்து உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. மேலும், சீடு முறையின் ஊடாக மணமகள் அலங்கார தேர்ச்சியாளர்களுக்கு ஏஞ சான்றிதழை வழங்கும் முறையை செயற்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறே இவ் ஆண்டில் உயர்தரத்தில் தொழில்நுட்ப பாடநெறியைப் பயின்ற பிள்ளைகளுக்கு ஏஞ சான்றிதழை வழங்குவதற்கு தேசிய நிகழ்ச்சி திட்டமொன்றை திட்டமிடல், சூர்ய வெளியீடு வோல்ட்டியதா கைத்தொழில் வினைஞர்களுக்கு 18 மாத முழு நேர பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த சான்றிதழ் பெறுநர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதலும், அதன் இரண்டாவது கட்டத்தை ஆரம்பித்தலும், அரசின் ஒரு இலட்சம் தொழில் வாய்ப்பு என்ற தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் பயிற்சியை பூர்த்தி செய்து சான்றிதழை பெறுவோர்களுக்கு சான்றிதழ்களை வழங்குதலும், இரண்டாவது கட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மின் வேலிகள் பராமரிப்பு உதவியாளர் துறையில் பயிற்சியை வழங்குவதன் மூலம் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

அடுத்துவரும் புதிய ஆண்டிற்காக வெளிநாட்டு தொழிற் சந்தைக்கு நேரடியாக தொடர்புபடுத்தக்கூடிய தேர்ச்சியாளர்களையும், பிரதான சந்தையில் நிறுவனங்களுக்கு அவசியமான திறன்மிக்க மென்பொருள் வினைஞர்களையும் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கனரக வாகன இயக்குநர்களை உருவாக்குவதற்கான முதலாம் கட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் இவ் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

அவ்வாறே கடந்த ஆண்டு 2022 ஆம் ஆண்டு பூராகவும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு நிறுவனத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக பங்களிப்பினை நல்கிய எனது சகோதர பணிக் குழுவிற்கும் எமது நிறுவனத்தின் பயிலுநர்களுக்கும் பயிற்சிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் நன்றியை தெரிவிப்பதற்கு இத்தருணத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன்.

டப்ளியூ. ருச்சிக அமரசேகர
தலைவர்

எமது நோக்கு

மனித வள அபிவிருத்தியின் ஊடாக, இலங்கை செழுமையை அடைவதற்கு, தாக்கமுள்ள பங்களிப்பினைச் செய்து அதி திறன் பயிற்சியினை வழங்கும் அமைப்பாக உருபெறுதல

எமது ஏற்புப் பணி

கைத்தொழிற் துறையிலான தேர்ச்சி பெற்ற மனிதவலுத் தேவைக்கு முகம் கொடுக்கும் வகையில், உயர்ந்த தொழிற்சார் நியமங்களுடனான, நன்றே உருவாக்கப்பட்ட தேர்ச்சிகளை தன்னகத்தே கொள்வதற்காய், இளம் பராயத்தினருக்கு வாழ்தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியை வழங்குதல

அதிகாரசபையின் நோக்கங்கள்

தாபிப்புச் சட்டத்தின் 37(1) ஆம் இலக்கப் பந்தியின் பிரகாரம் இந்த அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு அமைகின்றன.

(அ) தொழிற் பயிற்சிகளைத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல் மற்றும் வழங்குதல்.

(ஆ) தொழிற் பயிற்சிக்குரிய நியமங்களை நிர்ணயித்தல்.

(இ) தொழிற் பயிற்சிக்குரிய பரீட்சைகளை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் ஏனைய மானியங்களை வழங்குதல்.

(ஈ) தேசிய தொழினுட்பவியலாளர் பரீட்சையை நடாத்துதல்.

(உ) தொழிற் பயிற்சி குறித்த ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(ஊ) பல்வேறான திறன்களை மேம்படுத்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான போட்டிகளை நடாத்துதல்.

(எ) தொழிற் பயிற்சியை வழங்கும் நிறுவனங்களினதும் ஏனைய நிறுவனங்களினதும் பயிற்சி வழங்கும் திறன்களை அபிவிருத்தி செய்தல்.

(ஏ) தொழிற் பயிற்சி தொடர்பில் தொழிற் பயிற்சி ஆணைக்குழுவிற்கு ஆலோசனைகளை வழங்குதல்.

(ஐ) சம நோக்கங்களையுடைய இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அமைந்துள்ள நிறுவனங்களுடன் தொடர்புடைய சான்றிதழ்களை டிப்ளோமா மற்றும் பட்டதாரி ஆகியவற்றை சமமான தரங்களாக கருதுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

அதிகாரசபையின் பிரதான பணிகள்/ நிகழ்ச்சித் திட்டங்கள்

(அ) அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சிகளை வழங்குதல், 04 தேசிய நிறுவனங்கள் மற்றும் நாடுபூராகவும் அமையப்பெற்றுள்ள பயிலுநர் பயிற்சி நிலையங்களின் மூலமாக இரட்டை நிலைப் பயிற்சிகளை வழங்குதல்.

(ஆ) ஏனைய தொழிற் பயிற்சி பெறுவோரை வெவ்வேறான நிறுவனங்களுக்கு அனுப்பி பணிப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல்.

(இ) மொறட்டுவை, பேராதெனிய மற்றும் றுகுணு பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரி மாணவர்களுக்கும் ஏனைய டிப்ளோமா மாணவர்களுக்கும் தேவையான எந்திரவியல் பயிற்சிகளை வழங்குதல்.

(ஈ) முறைசாரா அடிப்படையில் திறன்களை பெற்றுள்ள கைத்தொழில் வினைஞர்களுக்கு முன் மதிப்பீட்டு முறைக்குத் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் வழங்குதல், தொழிலுக்கு ஏற்ற வகையில் தகைமைச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் தேவையான தேசிய தொழில் பரீட்சைகளை நடாத்துதல்.

(உ) தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பயிற்றுவிப்பாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்குதல்.

(ஊ) பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு இடைவிலகியோர் மற்றும் ஏனைய இலக்குக் குழுக்களுக்குத் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

அறிமுகம்

சட்ட கட்டமைப்பு

1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கத் தேசிய பயிலுநர் சபையாக ஆரம்பிக்கப்பட்டு 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையாக நிறுவப்பட்டது.

1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் படி அதிகாரசபையினால் ஆண்டறிக்கையை தயாரித்தல் வேண்டும்.

இவ்வறிக்கையில் 03 பகுதிகள் உள்ளடங்குவதோடு, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் பெறுபேற்று விபரங்களையும், பயிற்சி குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளையும், ஆண்டிற்கான சுருக்கமான வருடாந்த கணக்கு அறிக்கையையும், கணக்காய்வாளர் அறிக்கையில் உள்ளடங்கிய தகவலையும் உள்ளடக்கி இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் இயங்கும் 25 மாவட்ட அலுவலகங்களின் முகாமையாளர்கள் மற்றும் தேசிய நிறுவனங்களின் நிறுவனத் தலைவர்கள் அத்தோடு பிரதான அலுவலகங்களின் அந்தந்த பிரிவுகளின் பிரிவுத் தலைவர்களினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, அத்தகவல்களை ஆய்வு செய்து சுருக்கமாக 2022 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டு வழிமுறை

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபைக்கு உள்ள தத்துவங்களின் படி அச் சட்டத்தின் 37(1) ஆம் இலக்கங் கொண்ட பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட குறிக்கோள்களின் உச்சத்தை அடைந்து கொள்வதற்காக சபையானது தமது செயற்பாட்டு வழிமுறையை நடைமுறைப்படுத்துகின்றது.

இதற்காக பயிற்சி என்ற கருப்பொருளுக்கமைய 04 தேசிய நிறுவனங்கள், 25 மாவட்ட அலுவலகங்கள், பயிற்சி தொடர்பான நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச மற்றும் தனியார் துறைகளின் உதவியுடன் தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி வழங்கப்படுகின்றது.

பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு, கண்காணிப்பு, மேற்பார்வை, சான்றிதழ் அளிப்பு போன்ற பல்வேறு பிரிவுகளின் கீழ் நேரடியாகப் பயிற்சி செயற்பாட்டு நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இதற்கு மேலதிகமாக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம், ஊழியர் பயிற்சி, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, நிதி மற்றும் கணக்காய்வு ஆகியனவும் உள்ளடங்கும்.

நிர்வாகச் சபை

2022 ஆகஸ்ட் 26 ஆந் திகதியிலிருந்து

திரு. ருச்சிக அமரசேகர,
தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட, இராஜகிரிய.

பேராசிரியர் மஹிந்த ரூபசிங்ஹ,
பிரதி தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட, இராஜகிரிய.

கலாநிதி கே.ஏ. லலிததீர,
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
இல 354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.

திரு. எம்.ஏ.எஸ். மதுசங்க
அரச நிதிக் கொள்கை திணைக்களம்
பொது திறைசேரி
நிதி அமைச்சு
செயலாளர் அலுவலகம்
கொழும்பு 01

திரு. நெவில் அபேரத்ன
இல 137, நாகஹவத்த வீதி,
தலுகம, களனி

தி. டீ.ஆர். சோமவர்தன
இல 345/12, 3ஆம் குறுக்கு வீதி,
கோட்டே வீதி

துஷ்மந்த எம். சுபசிங்ஹ
இல 670/2, மங்கட வீதி,
கடவத்த

கலாநிதி காஞ்சனா சில்வா
"ஜனஹிரு"
இல 129/8 பீ,
அநகாரிக தர்மபால மாவத்தை
கண்டி
திரு. ஏ. சிதத் ரோஹண வைத்யசேகர
இல 788/1/ஏ, 3 ஆம் ஒழுங்கை
முவன்ஹெலவத்த
மாலம்பே

திரு. கே.ஜீ. விமலசேன
இல 262/1ஏ, பன்சலை வீதி
தலபத்பிட்டிய
நுகேகொட

பராக்கிரம ஜே.கே.எஸ்.டப். விக்கிரமசிங்ஹ
இல 32, கல்மடுவவத்த
குண்டசாலை

வைத்தியர் ரஞ்சித் பீரிஸ் (MBBS/MD)
இலங்கை தேசிய வைத்தியசாலை
கொழும்பு

ஐ.எஸ்.என். பெரேரா
இலங்கை வங்கி
பிரதான அலுவலகம்
கொழும்பு 01

திரு. எம்.எல். தஷித நிரோஷன
கல்வி அமைச்சு
(திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்கப் பிரிவு)
354கூ2" எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 05

2022 ஆகஸ்ட்ட 26 ஆந் திகதி வரை

திரு. தரங்க நளீன் கம்லத்,
தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட, இராஜகிரிய

பேராசிரியர் மஹிந்த ரூபசிங்ஹ,
பிரதி தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை,
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிகட, இராஜகிரிய.

கலாநிதி கே.ஏ. லலிததீர,
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
இல 354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05

திரு. எம்.ஏ.எஸ். மதுசங்க
அரச நிதிக் கொள்கை திணைக்களம்
பொது திறைசேரி
நிதி அமைச்சு
செயலாளர் அலுவலகம்
கொழும்பு 01

திரு. ஹசித ஏக்கநாயக்க
இல 79/5, மொறகஹமுல
மெதமஹநுவர
கண்டி

திரு. மொஹமட் மிக்தாட்
இல. 89/2, தெஹிவலை வீதி,
பெப்பிலியான
பொரலஸ்கமுவ

திரு. ஜானக கமல்கொட
இல 136 1/2 பழைய கெஸ்பேவ வீதி
கங்கொடவில
நுகேகொடை

திரு. எஸ்.கே.வை.ஜீ.எஸ்.கே. செனரத்
இல 309, கொழும்பு வீதி
கம்பஹா

திரு. எஸ்.ஏ.டீ. திலக் பிரேமலால்,
இல 123.˙.1ஏ, புகையிரத வீதி,
கங்கொடவில,
நுகேகொடை

திரு. சஹன் டி சில்வா,
இல. 1009/18, 8 ஆம் ஒழுங்கை,
சுமுது மாவத்தை,
மாலம்பே.

திரு. கிருஷான் சியம்பலாபிட்டிய,
முன்னாள் வெகுசன ஊடக அமைச்சரவை அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர்

திரு. டப்.வீ.ஜீ. விஜேசிறி
இல 03, சௌபாக்கிய உத்யானய,
கொஹிலகொறட்டுவ வீதி,
மகரகமை.

செல்வி. பிரியங்கிகா சிகேரா
இல. 25/1, சந்ரா வெத்தசிங்க மாவத்தை,
கொஸ்வத்த வீதி,
நாவல.

திரு. டீ.எம்.நிரஞ்சன் திஸாநாயக்க
இல. 126/4ஏ, ஸ்டேன்லி திலக்கரத்ன மாவத்தை,
நுகேகொடை

திரு. ஜீ. சமந்த குமார
குடியிருப்பு,
கல்முறுவ,
மாதம்பே.


திரு. எம்.எல்.டீ. நிரோஷன
நிரலமைச்சின் கண்காணிப்பு உறுப்பினர்

பணிப்பாளர் சபை உத்தியோகத்தர்கள்

1.	திரு. தரங்க நளீன் கம்லத்	தலைவர் (2022.01.01 - 2022.08.25)
2.	திரு. ருச்சிக அமரசேகர	தலைவர் (2022.08.26 இலிருந்து இன்று வரை)
3.	பேராசிரியர் மஹிந்த ரூபசிங்க	பிரதி தலைவர் (2022.01.01 - 2022.11.08)
4.	திரு. எஸ்.எச். ஹரிஸ்சந்திர	பிரதி தலைவர் (2022.11.22 இலிருந்து இன்று வரை)
5.	கலாநிதி டப்.எம்.எஸ். விஜேசிங்க	பணிப்பாளர் நாயகம்
6.	திரு. பீ.ஆர். றொட்ரிகோ	பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் மேற்பார்வை)
7.	திரு. சுமேத ஜயசிங்க	பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் ஆளணி)
8.	திரு. டப்.எம்.ஏ.கே. வீரசேகர	பணிப்பாளர் (நிதி) (2022.04.18 இலிருந்து இன்று வரை)
9.	திரு. ஜீ.எச்.வீ.என்.டப். டி சில்வா	பிரதிப் பணிப்பாளர் / பணிப்பாளர் (பயிற்சி) ப.க. (2019.07.10 இலிருந்து இன்று வரை)
10.	திரு. சீ.பீ. சுபசிங்ஹ	பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) பணிப்பாளர் (தரநிர்ணயம்) ப.க. (2021.11.23 இலிருந்து இன்று வரை)
11.	திருமதி. என்.டப்.என். சந்தமாலி	உள்ளக கணக்காய்வு / பணிப்பாளர் (நிதி) அ.வ. (2020.06.11 - 2022.04.17)
12.	திரு. ரீ.பீ.கே. பெரேரா	பிரதிப் பணிப்பாளர் (தரநிர்ணயம்)
13.	திரு. எஸ்.வீ.பீ. விக்ரமசிங்க	பிரதிப் பணிப்பாளர் (மதிப்பீடு)
14.	திரு. டப்.ஏ.கே.எஸ். குமார	பிரதிப் பணிப்பாளர் (பணியிடப் பயிற்சி)
15.	திரு. ஏ. ஜே. பத்திரண	உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்)
16.	திரு. எம்.எல்.பீ. பர்னாந்து சந்தைப்படுத்தலும்)	உதவிப் பணிப்பாளர் (தொழில் வழிகாட்டலும்
17.	திரு. ஜீ.பீ. சுனில்	உதவிப் பணிப்பாளர் (NSS)
18.	திரு. ஆர்.டப்.எம்.ஏ.ஜே. ரத்னாயக்க	உதவிப் பணிப்பாளர் (පරිඥ)
19.	திருமதி. யு.எம். பிரபோஷினி	உதவிப் பணிப்பாளர் (கணக்கு மற்றும் நிர்வாகம்)
20.	திரு. என்.டீ.பீ. உஸ்கொடாரச்சி	உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் விநியோகம்)
21.	திருமதி. பீ.எம். விதானகே	உதவிப் பணிப்பாளர் (பயிற்சி சேவைகள்)
22.	திரு. ஏ.எச்.எஸ்.பீ. விஜேரத்ன	உதவிப் பணிப்பாளர் (மேற்பார்வை)
23.	திரு. கே.ஏ.எஸ்.எஸ். ஜயசிங்க	உதவிப் பணிப்பாளர் (விசேஷ பணியிடப் பயிற்சி)
24.	திரு. பீ.எஸ்.டப். திஸாநாயக்க	உதவிப் பணிப்பாளர் (ஆளணி முகாமைத்துவம்)
25.	திருமதி. எச்.எம்.பி.ஏ.கே. விஜேரத்ன	உதவிப் பணிப்பாளர் (சான்றிதழ்) பயிற்சி அதிகாரி - தரம் III
	திரு. எஸ்.கே. விக்ரமஆரச்சி	உதவிப் பணிப்பாளர் (ஆளணி அபிவிருத்தி) ப.க. (2022.09.01 ஆம் திகதியிலிருந்து இன்று வரை)
26.	திரு. டீ.ஆர். சப்புதந்த்ரி	பணிப்பாளர் / அதிபர் - IET
27.	திருமதி. எச்.ஏ.என்.டீ. குமாரி	உதவிப் பணிப்பாளர் (பராமரிப்பு மற்றும் சிவில்) ப.க. (2021.12.01 ஆம் திகதியிலிருந்து)
28.	திரு. எம்.எச்.பீ. தர்மசிறி	பிரதிப் பணிப்பாளர் / பணிப்பாளர் அதிபர் (ப.க.) - IETI
29.	திரு. டீ.எல்.ஏ.கே. திஸாநாயக்க	பயிற்சி அதிகாரி - தரம் II பணிப்பாளர் / அதிபர் (ப.க.) - AETI


மாவட்ட முகாமையாளர்கள்

1.	திரு. எஸ்.டீ. அபேவிக்ரம	அம்பாந்தோட்டை
2.	திரு. ஏ. மசூர் (2022.11.22 ஆம் திகதி ஓய்வு பெற்றார்) திரு. எம்.சீ.எம். அபேசுந்தர (ப.க.) (2022.11.23 ஆம் திகதியிலிருந்து)	அம்பாறை
3.	திருமதி. டீ.டீ. ஜயலத் (2022.06.13 ஆம் திகதி ஓய்வு பெற்றார்) திரு. பீ.எம்.ஜே.எஸ்.கே. ரணராஜா (2022.06.06 ஆம் திகதியிலிருந்து)	கேகாலை
4.	திரு. எம்.ஆர்.டீ.ஏ.எஸ். குணரத்ன	கொழும்பு
5.	திரு. யு.எம்.கே. நாணாயக்கார	மாத்தறை
6.	திரு. பீ.கே.பீ. குணவர்தன	பதுளை
7.	திரு. பீ. நாரன்கொட	காலி
8.	திரு. ரீ.ஜீ.எஸ். ஜயலத்	களுத்தறை
9.	திரு. எஸ்.ஏ.எஸ்.எம். சலீம் மௌலானா	மட்டக்களப்பு
10.	திரு. எஸ். வீனஸ் (2022.06.31 ஆந் திகதி வரை மன்னார் மாவட்ட முகாமையாளராக 2022.06.01 ஆந் திகதியிலிருந்து இன்று வரை கிளிநொச்சி மாவட்ட முகாமையாளராக கடமையாற்றுகிறார்.)	மன்னார், கிளிநொச்சி
11.	திரு. எஸ். தீபன் (ப.க.)	மன்னார்
12.	திரு. எஸ்.பீ.சீ.ஜே. மைத்ரீதாச	மொணறாகலை
13.	திரு. ஆர்.எம்.என்.எஸ்.கே. ரத்னாயக்க	புத்தளம்
14.	திரு. ஜீ.ரீ. ரத்னகுமார (ப.க.) (2022.07.31 ஆந் திகதி வரை) ஆர். திருமுருகன் (2022.08.01 ஆந் திகதியிலிருந்து)	யாழ்ப்பாணம்
15.	திருமதி. எஸ். சிவகௌரி	முல்லைத்தீவு
16.	திருமதி. கே.கே. நிஷ்ஷங்க	குருணாகலை
17.	திரு. ஓ.கே.ஜி.ஏ. சமன் குமார	கண்டி
18.	திருமதி. ஐ.எம்.யூ.எஸ்.கே. இலங்ககோன்	மாத்தளை
19.	திரு. ரீ.எம்.ரீ.பீ. கருணாரத்ன (ப.க.) (2022.07.31 ஆந் திகதி வரை) திரு. எஸ்.எஸ். செனவிரத்ன (2022.08.01 ஆந் திகதியிலிருந்து)	அனுராதபுரம்
20.	திரு. பீ.ஆர். குமாரசிங்க (2022.08.01 ஆந் திகதியிலிருந்து)	கம்பகா
21.	திரு. எஸ். சுபாஷ் (ப.க.) (2022.07.31 ஆந் திகதி வரை) திரு. வை. யோகேஸ்வரன் (ப.க.)	வவுனியா
22.	திரு. யூ.ஜீ.என். சமீர (ப.க.)	பொலன்னறுவை
23.	திரு. வை.எஸ். ஜயதிலக்க (ப.க.)	இரத்தினபுரி
24.	திரு. கே. பத்மநாதன்	திருகோணமலை
25.	திரு. டீ.ஏ.டீ. சூரியபண்டார (ப.க.)	நுவரெலியா


National Apprentice & Industrial Training Authority
Organizational Structure
Board Of Management
Chairman /CEO
Vice Chairman
Director General
Director Admin. & H.R.
Director Training
Institutes/ Districts
Director Quality
Director Planning & Monitoring
Director Finance
A.D. Admin
A.D. Maint.& Civil .
A.D. HRM
A.D. HRD
A.D. Training Service
A.D. Training
A.D. Cluster
A.D. SIT
A.D. OJT
A.D. C.G.& Marketing
A.D. Quality
A.D. NSS
A.D. Assesment
A.D. Certificate
A.D. Information Systems
A.D. Planning & Develop.
A.D. Monitoring
A.D. Acc. & Controll
B/ Sec Leg.Off
Internal Auditor
I.A.O
VRU Officer
Proc. Officer
Trp. Officer
Tech. Officer
Drft.M. M.A.
M.A.
Drivers
Office Aide
A.O.
T.O.
Inspec
Inspec.
Transl ator.
M.A.
Q.A. Off.
Sys. Adm
D.B Adm
Stat. cian
Acct. Officer
Book Keeper
Management Asst.
Office Aide

தரவுகளை வெளிப்படுத்தலும் பகுப்பாய்வும்

வரைபு 1 : பயிற்சியளித்தலின் சாராம்சம் (18 வருடங்களில்)



கடந்த 18 ஆண்டுகளில் நிறுவன ரீதியான ஆட்சேர்ப்பு, பயிற்சியிலிருந்து இடைவிலகல், பயிற்சியை பூர்த்தி செய்தல் மற்றும் பயிற்சியில் ஈடுபட்டிருத்தல் தொடர்பாக சுருக்கமான பகுப்பாய்வினை மேற்படி வரைபு காட்டுகின்றது. நிறுவன ரீதியான ஆட்சேர்ப்பினை அவதானிக்கும் போது கடந்த ஆண்டுகளில் இடைவிடாத வளர்ச்சியினை வெளிப்படுத்தி இருப்பினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதிவேக வீழ்ச்சியைக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், மீண்டும் ஆட்சேர்ப்புகளில் அதிவேக வளர்ச்சியை நோக்கி செல்வதற்கு இவ்வாண்டில் இயலக்கூடும். பயிலுநர்கள் பயிற்சியை விட்டு இடைவிலகலானது கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் சாதாரண மட்டத்தில் உள்ளது. பயிலுநர்கள் பயிற்சியைப் பூர்த்தி செய்தல் மற்றும் பயிற்சியில் ஈடுபட்டிருத்தல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியினைக் காட்டுகின்றது.

அட்டவணை 1 : நிலைய மைய, கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சியும், தேசிய நிறுவனங்களிற்குப் பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பெறுபேற்றின் வெளிப்படுத்தல

பயிற்சியின் வகை		இலக்கு	ஆட்சேர்ப்பு	ஆட்சேர்ப்பு வீதம்
கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி				
தேசிய தொழிற் தகைமை		15,090	13,931	**92.3%**
கைத்தொழில் வினைஞர்		4,040	2,736	**67.7%**
அமைவிட வினைஞர்		1,975	1,093	**55.3%**
கிராமிய மட்டம்		855	510	**59.6%**
விசேட பயிற்சி (ASTA , சிறைச்சாலை, விசேட தேவையுடையோர்)		240	167	**69.6%**
13 ஆண்டுகள் தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்		800	602	**75.3%**
பல்நோக்கு அபிவிருத்திப் பணிக்குழு		65,200	3,543	**5.4%**
நிலைய மைய பயிலுநர் பயிற்சி				
முழு நேரம்	தேசிய தொழில்சார் தகைமை	3,245	2,678	**82.5%**
	தேசிய தொழில்சார் தகைமை அல்லாத	755	245	**32.5%**
பகுதி நேரம்		1,000	391	**39.1%**
தேசிய நிறுவனங்கள்				
முழு நேரம்		1,450	1,269	**87.5%**
பகுதி நேரம்		550	983	**178.7%**
				வெளிநாடு
விசேட கைத்தொழில் பயிற்சி		15,000	13,561	**90.4%**
தொழிலுடனானப் பயிற்சி	அரச தனியார் துறை	20,000	9,797	**60.9%**
	13 ஆண்டுகள் தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்		631	
	உயர்தரத்தில் தொழில்நுட்பத்தை பயின்ற மாணவர்களுக்காக		1,742	
மொத்தம்		**130,200**	**53,879**	**41.4%**

மீளாய்வாண்டில் பல்வேறு பயிற்சி பாடநெறிகளுக்காக நிலைய மைய பயிலுநர்கள் நிறுவனத்தினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பெறுபேறுகள் இவ் அட்டவணை மூலம் காட்டப்படுகின்றது.

இவ்வாண்டில் 53,879 பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 41.4மூ இலக்கானது அடையப்பட்டுள்ளது. இங்கு ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது கூடுதலான பாடநெறிகளுக்கு 50மூ இலும் அதிகமான இலக்குகள் அடையப்பெற்றுள்ளமை இவ் அட்டவணை மூலம் தெளிவாகின்றது. தேசிய நிறுவனங்களில் பகுதி நேர பாடநெறிகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கும் மேலதிகமாக அதிகபட்ச ஆட்சேர்ப்புகள் செய்வதற்கு முடிந்தது.

அட்டவணை 02 - பயிற்சியளித்தலின் பெறுபேறு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுதல்

2022		ஆட்சேர்ப்பு		பயிற்சியில் இருந்து இடைவிலகல்		பயிற்சியைப் பூர்த்தி செய்தல்		பயிற்சியில் இருப்போர் எண்ணிக்கை	
		2021	2022	2021	2022	2021	2022	2021	2022
கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி									
தேசிய தொழில்சார் தகைமை		7,115	13,931	1,221	3,798	4,541	5,301	8,142	12,974
கைத்தொழில் வினைஞர்		2,419	2,736	645	837	1,879	1,686	3,330	3,543
அமைவிட வினைஞர்		823	1,093	95	217	353	913	735	698
கிராமிய மட்டம்		359	510	81	138	186	408	252	216
விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (சிறைச்சாலை, விசேட தேவையுடையோர்)		3,263	167	222	47	4,045	459	409	70
நிலைய மைய பயிலுநர் பயிற்சி									
முழு நேரம்	தேசிய தொழில்சார் தகைமை அல்லாத	2,282	2,678	222	427	1,137	2,057	2,363	2,557
	தேசிய தொழில்சார் தகைமை	233	245	37	79	177	188	230	208
பகுதி நேரம்		93	391	-	3	70	319	42	111
தேசிய நிறுவனங்கள்									
முழு நேரம்		390	1,269	352	315	925	1,100	2,545	2,399
பகுதி நேரம்		300	983	101	1	300	809	-	173
மொத்தம்		**17,277**	**24,003**	**2,976**	**5,862**	**13,613**	**13,240**	**18,048**	**22,949**
ஏனையவை									
விசேட கைத்தொழில் பயிற்சி		5,439	13,561	-	-	4,696	8,812	2,563	7,312
தொழிலுடனானப் பயிற்சி		6,690	9,797	1,945	1,286	5,581	6,687	572	2,396
மொத்தம்		**29,406**	**47,361**	**4,921**	**7,148**	**23,890**	**28,739**	**21,183**	**32,657**

*** பயிற்சியைப் பூர்த்தி செய்தல் மற்றும் பயிற்சியிலிருந்து இடைவிலகல் என்பனவற்றில் கடந்த வருடம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுநர்களும் உள்ளடங்குவர்.

பல்வேறு பயிற்சி முறைகளில் பயிற்சியளித்தல் பணிகளின் பெறுபேறுகளின் ஒப்பீட்டினை மேற்படி அட்டவணை காட்டுகின்றது. இங்கு முழுமையாக 47,361 பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 61மூ வளர்ச்சியை கடந்து ஆண்டுடன் ஒப்பீடு செய்து காட்டப்பட்டுள்ளது. மாணவர்கள் இடைவிலகிச் செல்லல் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏறத்தாழ 20மூ ஐ அண்மித்த வளர்ச்சியைக் காட்டுகின்றது. தேசிய நிறுவனங்களுக்கான ஆட்சேர்ப்பானது மீளாய்வாண்டில சாதகமான பெறுபேற்றினைக் காட்டுகின்றது. 2021 ஆம் ஆண்டில் 21,183 பயிலுநர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததோடு, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 32,657 பயிலுநர்கள் எமது நிறுவனத்தில் விடயப்பரப்பு பாடநெறிகளில் பயிலுநர் பயிற்சியை பெற்றுக் கொண்டிருந்தனர்.


அட்டவணை 03 - மீளாய்வாண்டில் பயிற்சியளித்தலின் சாராம்சம் (பல்வேறு பயிற்சிகளின் வகைப்படுத்தல்கள்) 2022

2022	ஆட்சேர்ப்பு			பயிற்சியிலிருந்து இடைவிலகல்			பயிற்சியைப் பூர்த்தி செய்தல்			பயிற்சியிலிருப்போர்		
	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி												
தேசிய தொழில்சார் தகைமை (NVQ)	7,472	6,459	13,931	2,199	1,599	3,798	3,101	2,200	5,301	7439	5535	12,974
கைத்தொழில் வினைஞர்	1,206	1,530	2,736	441	396	837	805	881	1,686	1956	1587	3,543
அமைவிட வினைஞர்	537	556	1,093	111	106	217	432	481	913	382	316	698
கிராமிய மட்டம்	59	451	510	13	125	138	78	330	408	20	196	216
விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (சிறைச்சாலை, விசேட தேவையுடையோர்)	158	9	167	47	-	47	457	2	459	61	9	70
மொத்தம்	9,432	9,005	18,437	2,811	2,226	5,037	4,873	3,894	8,767	9,858	7,643	17,501
நிலைய மைய பயிலுநர் பயிற்சி												
தேசிய தொழில்சார் தகைமை (NVQ)	795	1,883	2,678	152	275	427	512	1545	2,057	815	1742	2,557
தேசிய தொழில்சார் தகைமை அல்லாத (Non NVQ)	14	231	245	5	74	79	2	186	188	12	196	208
பகுதி நேரம்	88	303	391	3	-	3	61	258	319	30	81	111
மொத்தம்	897	2,417	3,314	160	349	509	575	1,989	2,564	857	2,019	2,876
தேசிய நிறுவனங்கள்												
முழு நேரம்	1,069	200	1,269	272	43	315	944	156	1,100	1,974	425	2,399
பகுதி நேரம்	946	37	983	1	-	1	796	13	809	149	24	173
மொத்தம்	**2,015**	**237**	**2,252**	**273**	**43**	**316**	**1,740**	**169**	**1,909**	**2,123**	**449**	**2,572**
ஏனையவை												
விசேட கைத்தொழில் பயிற்சி	7,991	5,570	13,561	-	-	-	5,242	3,570	8,812	4,320	2,992	7,312
தொழிலுடனானப் பயிற்சி	4,861	4,936	9,797	313	401	714	3,038	3,649	6,687	1,510	886	2,396
மொத்தம்	12,852	10,506	23,358	313	401	714	8,280	7,219	15,499	5,830	3,878	9,708
மொத்தக் கூட்டுத்தொகை	**25,196**	**22,165**	**47,361**	**3,557**	**3,019**	**6,576**	**15,468**	**13,271**	**28,739**	**18,668**	**13,989**	**32,657**

*** பயிற்சியைப் பூர்த்தி செய்தல் மற்றும் பயிற்சியிலிருந்து இடைவிலகல் என்பனவற்றில் கடந்த வருடம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுநர்களும் உள்ளடங்குவர்.


மீளாய்வாண்டில் பல்வேறு பயிற்சி முறைகளின் கீழ் பாலின அடிப்படையில் பயிலுநர்களை பயிற்சிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல், பயிற்சியை விட்டு இடைவிலகல், பயிற்சியை பூர்த்தி செய்தல் மற்றும் பயிற்சியில் ஈடுபடுதல் இவை விரிவடைந்துள்ள விதத்தை இவ் அட்டவணை காட்டுகின்றது. இவ்வாண்டில் முழுமையாக 47,361 பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்ய முடிந்தது. அத்தோடு, 25,196 ஆண் பயிலுநர்களும் 22,165 பெண் பயிலுநர்களும் இதில் அடங்குவர். இங்கு கைத்தொழில் பயிற்சியின் கீழ் பெண் மற்றும் ஆண் பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்கையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படவில்லை என்றாலும் நிலைய மைய அடிப்படையிலான பயிலுநர்கள் பயிற்சி முறையின் கீழ் ஆண் பயிலுநர்களின் பங்குபற்றலானது குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியினைக் கண்டுள்ளது. தேசிய நிறுவனங்களுக்காக இவ்வாண்டில் 2,252 பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. 6,576 பயிலுநர்கள் பயிற்சியிலிருந்து இடைவிலகிச் சென்றதோடு, 28,739 பயிலுநர்கள் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளனர். கைத்தொழில் அடிப்படையிலான பயிற்சி முறை, நிலைய மைய அடிப்படையிலான பயிற்சி மற்றும் நிறுவனத்தின் கீழ் முறையே 17,501, 2,876 மற்றும் 2,572 பயிலுநர்கள் மேலும் எமது நிறுவனத்தின் பயிற்சியை பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

வரைபடம் 02 - மீளாய்வாண்டில் பாலின அடிப்படையில் பயிற்சியளிப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்தல்.



மீளாய்வாண்டில் பாலின அடிப்படையில் பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்தலானது இவ் வரைபின் மூலம் காட்டப்பட்டுள்ளது. இங்கு முழுமையான பயிலுநர்களில் 53மூ ஆண் பயிலுநர்களை பிரதிநிதித்துவம் செய்வதோடு, 47மூ பெண் பயிலுநர்கள் ஆவர்.

வரைபு 03 - தேசிய பயிலுநர் பயிற்சி (பகுதிநேர பயிலுநர் பயிற்சி தவிர்ந்த)



2022 ஆம் ஆண்டில் தேசிய தொழிற் தகைமை மற்றும் ஏனைய பயிற்சியளித்தலின் கீழ் பயிலுநர்களை ஆட்சேர்ப்பினை வரைபு காட்டுகின்றது. முழுமையாக நோக்கும் போது தேசிய தொழிற் தகைமையின் கீழ் பயிலுநர்களை பயிற்சி முறைகளில் இணைப்பதற்கு அதிக ஆர்வத்தைக் காட்டியுள்ளமை வரைபின் மூலம் தெளிவாகின்றது. இங்கு கைத்தொழில் பயிற்சி முறையில் 13,974 பயிலுநர்கள் தேசிய தொழிற் தகைமையின் கீழ் பயிற்சியளிப்பதற்கு எமது நிறுவனம் தொடர்புபட்டுள்ளது. அதனை சதவீதத்தில் கூறுவதாயின் 76மூ ஆகும். 24மூ ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய தொழிற் தகைமை அல்லாத பாடநெறிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. நிலைய மைய பயிற்சியின் கீழ் தேசிய தொழிற் தகைமைக்காக 2,678 பயிலுநர்களும், தேசிய நிறுவனங்களுக்காக 1,213 பயிலுநர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அட்டவணை 4 : தேசிய நிறுவனங்களின் பெறுபேறு (முழுநேர பாடநெறிகள்)

மாவட்டம்	இலக்கு	ஆட்சேர்ப்பு			பயிற்சியிலிருந்து இடைவிலகல்			பயிற்சியைப் பூர்த்தி செய்தல்			பயிற்சியிலிருப்போர்		
		ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
தேசிய நிறுவனங்கள்													
மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம் - கட்டுபெத்த	450	453	19	472	106	13	119	363	16	379	642	19	661
கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம் - கட்டுபெத்த	500	482	111	593	159	26	185	300	60	360	559	83	642
பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் - கட்டுநாயக்க	500	134	70	204	7	4	11	281	80	361	773	323	1096
மொத்தம்	**1,450**	**1,069**	**200**	**1,269**	**272**	**43**	**315**	**944**	**156**	**1,100**	**1,974**	**425**	**2,399**

மூமீளாய்வாண்டில் 3 தேசிய நிறுவனங்களின் கீழ் பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்தலும், பயிற்சியிலிருந்து இடைவிலகலும், பயிற்சிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்தலும், பயிற்சியில் ஈடுபட்டிருத்தலும் அட்டவணை மூலம் காட்டப்படுகின்றது. இவ்வாண்டில் கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனமானது ஆகக்கூடுதலான பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்துள்ளதோடு, அதனை தேசிய நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிலுநர்களின் மொத்த எண்ணிக்கை 1,269 உம் 47மூ உம் ஆகும். மேலும், மூன்று தேசிய நிறுவனங்களில் 1,100 மாணவர்கள் இவ்வாண்டில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதோடு, 2,399 பயிலுநர்கள் பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

அட்டவணை 5 (கைத்தொழில் மைய மற்றும் நிலைய மைய பயிற்சியளித்தலின் சாராம்சம்

மாவட்டம்	இலக்கு	ஆட்சேர்ப்பு			பயிற்சியிலிருந்து இடைவிலகல்			பயிற்சியைப் பூர்த்தி செய்தல்			பயிற்சியிலிருப்போர்		
		ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
கொழும்பு	3,140	1,318	743	2,061	64	3	67	490	219	709	1,610	845	2,455
கம்பகா	1,430	743	397	1,140	352	97	449	189	69	258	742	357	1,099
களுத்துறை	1,050	509	313	822	304	159	463	132	94	226	467	244	711
கண்டி	1,370	552	533	1,085	47	112	159	259	148	407	579	458	1,037
மாத்தளை	610	222	264	486	60	49	109	80	95	175	211	241	452
நுவரெலியா	750	164	336	500	57	137	194	36	200	236	143	263	406
காலி	1,530	615	768	1,383	213	208	421	236	399	635	715	712	1,427
மாத்தறை	1,360	509	776	1,285	253	229	482	252	301	553	478	651	1,129
அம்பாந்தோட்டை	1,270	366	574	940	121	141	262	201	274	475	284	476	760
யாழ்ப்பாணம்	1,010	287	502	789	57	98	155	183	286	469	350	464	814
மன்னார்	580	231	247	478	4	1	5	209	167	376	263	228	491
வவுனியா	750	277	388	665	126	138	264	197	232	429	177	234	411
முல்லைத்தீவு	570	90	372	462	21	46	67	48	222	270	145	316	461
கிளிநொச்சி	620	263	265	528	121	66	187	139	142	281	217	212	429
மட்டக்களப்பு	1,240	712	404	1,116	75	36	111	513	347	860	746	402	1,148
அம்பாறை	1,060	605	308	913	89	41	130	416	184	600	684	294	978
திருகோணமலை	1,290	494	687	1,181	94	69	163	450	480	930	603	770	1,373
குருணாகலை	1,270	408	506	914	87	79	166	214	379	593	471	461	932
புத்தளம்	740	309	374	683	68	84	152	214	209	423	328	289	617
அனுராதபுரம்	1,140	273	316	589	117	74	191	163	117	280	304	287	591
பொலன்னறுவை	920	143	476	619	117	272	389	240	275	515	102	104	206
பதுளை	880	207	391	598	131	154	285	53	177	230	177	293	470
மொணராகலை	650	175	240	415	83	66	149	53	98	151	155	187	342
இரத்தினபுரி	1,100	452	554	1,006	193	103	296	222	244	466	488	513	1,001
கேகாலை	870	317	385	702	114	113	227	198	267	465	246	280	526
மொத்தம்	**27,200**	**10,241**	**11,119**	**21,360**	**2,968**	**2,575**	**5,543**	**5,387**	**5,625**	**11,012**	**10,685**	**9,581**	**20,266**

மாவட்ட மட்டத்தில் கைத்தொழில் மைய மற்றும் நிலைய மைய பயிற்சியளித்தலின் சுருக்கம் இவ் அட்டவணை மூலம் காட்டப்படுகின்றது. 25 மாவட்டங்களில் 21,360 பயிலுநர்கள் மொத்தமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை சதவீதமாக நோக்கும் போது ஏறத்தாழ 79மூ உம், ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிலுநர்களின் எண்ணிக்கையை பெறுமான ரீதியில் நோக்கும் போது கொழும்பு மாவட்டத்தில் அதிகமான பயிலுநர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். மாத்தறை மாவட்டமானது இலக்கினை பூர்த்தி செய்தலில் முன்னோக்கிக் காணப்படுகின்றது. இலக்கானது இங்கு 95மூ பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 10,685 பயிலுநர்கள் பயிற்சியினை பூர்த்தி செய்துள்ளதோடு, மாவட்ட ரீதியில் 20,266 பயிலுநர்கள் பயிற்சியினை பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

அட்டவணை 6 - அமைவிட மைய பயிற்சி முழு நேரம் மாவட்ட மட்டத்தில் (தேசிய நிறுவனங்கள் தவிர்ந்த)

மாவட்டம்	ஆட்சேர்ப்பு			பயிற்சியிலிருந்து இடைவிலகல்			பயிற்சியைப் பூர்த்தி செய்தல்			பயிற்சியிலிருப்போர்		
	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
கொழும்பு	50	102	152	-	3	3	38	46	84	50	102	152
கம்பகா	11	27	38	2	4	6	10	25	35	11	27	38
களுத்துறை	49	55	104	10	12	22	38	43	81	61	53	114
கண்டி	155	86	241	8	17	25	52	35	87	155	72	227
மாத்தளை	12	69	81	3	14	17	7	55	62	12	63	75
நுவரெலியா	21	156	177	5	54	59	7	152	159	18	141	159
காலி	29	129	158	6	13	19	24	104	128	36	124	160
மாத்தறை	7	96	103	1	25	26	4	94	98	6	98	104
அம்பாந்தோட்டை	20	135	155	6	19	25	16	98	114	30	108	138
யாழ்ப்பாணம்	14	65	79	5	14	19	22	63	85	14	60	74
மன்னார்	-	39	39	-	-	-	-	41	41	-	39	39
வவுனியா	34	47	81	11	4	15	10	30	40	23	43	66
முல்லைத்தீவு												
கிளிநொச்சி	72	120	192	51	32	83	20	94	114	64	99	163
மட்டக்களப்பு	15	36	51	2	13	15	49	32	81	25	23	48
அம்பாறை	-	34	34	-	5	5	-	25	25	-	14	14
திருகோணமலை	39	49	88	4	4	8	39	80	119	39	49	88
குருணாகலை	126	140	266	-	6	6	35	170	205	139	134	273
புத்தளம்	26	116	142	7	23	30	18	74	92	24	110	134
அனுராதபுரம்	35	128	163	1	12	13	14	48	62	34	116	150
பொலன்னறுவை	9	43	52	9	6	15	41	45	86	9	38	47
பதுளை	22	64	86	10	18	28	19	72	91	21	80	101
மொணராகலை	25	89	114	11	32	43	5	19	24	21	68	89
இரத்தினபுரி	19	152	171	-	-	-	21	138	159	19	149	168
கேகாலை	19	137	156	5	19	24	25	148	173	16	128	144
மொத்தம்	**809**	**2,114**	**2,923**	**157**	**349**	**506**	**514**	**1,731**	**2,245**	**827**	**1,938**	**2,765**

*** பயிற்சியைப் பூர்த்தி செய்தல் மற்றும் பயிற்சியிலிருந்து இடைவிலகல் என்பனவற்றில் கடந்த வருடம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுநர்களும் உள்ளடங்குவர்.

மீளாய்வாண்டில் அமைவிட மைய அடிப்படையிலான இரட்டைப் பயிற்சியில் முழு நேர பாடநெறிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பயிலுநர்களின் எண்ணிக்கையை மேற்படி அட்டவணை காட்டுகின்றது. மாவட்ட மட்டத்தில் அமைவிட மைய அடிப்படையிலான பயிற்சியை அவதானிக்கும் போது ஆகக் கூடுதலான பயிலுநர்கள் குருணாகலை மாவட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அம் மாவட்டம் முன்னிலை வகிக்கின்றது. மாவட்ட மட்டத்தில் 2,245 பயிலுநர்கள் வெற்றிகரமாக பயிற்சியை பூர்த்தி செய்துள்ளதோடு, மேலும், 2,765 பயிலுநர்கள் பயிற்சியை பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

அட்டவணை 7 (கைத்தொழில் மைய பயிற்சி முழு நேரம் மாவட்ட மட்டத்தில் (தேசிய நிறுவனங்கள் தவிர்ந்த)

மாவட்டம்	ஆட்சேர்ப்பு			பயிற்சியிலிருந்து இடைவிலகல்			பயிற்சியைப் பூர்த்தி செய்தல்			பயிற்சியிலிருப்போர்		
	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
கொழும்பு	1,268	641	1,909	64	-	64	452	173	625	1,560	743	2,303
கம்பகா	732	370	1,102	350	93	443	179	44	223	731	330	1,061
களுத்துறை	460	258	718	294	147	441	94	51	145	406	191	597
கண்டி	397	447	844	39	95	134	207	113	320	424	386	810
மாத்தளை	210	195	405	57	35	92	73	40	113	199	178	377
நுவரெலியா	143	180	323	52	83	135	29	48	77	125	122	247
காலி	586	639	1,225	207	195	402	212	295	507	679	588	1,267
மாத்தறை	502	680	1,182	252	204	456	248	207	455	472	553	1,025
அம்பாந்தோட்டை	346	439	785	115	122	237	185	176	361	254	368	622
யாழ்ப்பாணம்	273	437	710	52	84	136	161	223	384	336	404	740
மன்னார்	231	208	439	4	1	5	209	126	335	263	189	452
வவுனியா	243	341	584	115	134	249	187	202	389	154	191	345
முல்லைத்தீவு	90	372	462	21	46	67	48	222	270	145	316	461
கிளிநொச்சி	191	145	336	70	34	104	119	48	167	153	113	266
மட்டக்களப்பு	697	368	1,065	73	23	96	464	315	779	721	379	1,100
அம்பாறை	605	274	879	89	36	125	416	159	575	684	280	964
திருகோணமலை	455	638	1,093	90	65	155	411	400	811	564	721	1,285
குருணாகலை	282	366	648	87	73	160	179	209	388	332	327	659
புத்தளம்	283	258	541	61	61	122	196	135	331	304	179	483
அனுராதபுரம்	238	188	426	116	62	178	149	69	218	270	171	441
பொலன்னறுவை	134	433	567	108	266	374	199	230	429	93	66	159
பதுளை	185	327	512	121	136	257	34	105	139	156	213	369
மொணராகலை	150	151	301	72	34	106	48	79	127	134	119	253
இரத்தினபுரி	433	402	835	193	103	296	201	106	307	469	364	833
கேகாலை	298	248	546	109	94	203	173	119	292	230	152	382
மொத்தம்	**9,432**	**9,005**	**18,437**	**2,811**	**2,226**	**5,037**	**4,873**	**3,894**	**8,767**	**9,858**	**7,643**	**17,501**

*** பயிற்சியைப் பூர்த்தி செய்தல் மற்றும் பயிற்சியிலிருந்து இடைவிலகல் என்பனவற்றில் கடந்த வருடம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுநர்களும் உள்ளடங்குவர்.


மாவட்ட மட்டத்தில் கைத்தொழில் அடிப்படையிலான பயிற்சியில் முழு நேர பாடநெறியின் தரவுப் பகுப்பாய்வினை மேலேயுள்ள அட்டவணை காட்டுகின்றது. கொழும்பு மாவட்டத்திலே ஆகக் கூடுதலான பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட மட்டத்தில் 18,437 பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். 8,767 பயிலுநர்கள் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளனர். மாவட்ட மட்டத்தில் 17,501 பயிலுநர்கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அட்டவணை 8 (பகுதிநேர பயிற்சியளித்தலின் சாராம்சம்

மாவட்டம்	ஆட்சேர்ப்பு			பயிற்சியிலிருந்து இடைவிலகல்			பயிற்சியைப் பூர்த்தி செய்தல்			பயிற்சியிலிருப்போர்		
	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
பதுளை	11	74	85	-	-	-	6	59	65	5	15	20
களுத்துறை	22	52	74	-	-	-	4	16	20	18	36	54
கேகாலை	-	-	-	-	-	-	6	36	42	-	-	-
மாத்தறை	7	30	37	3		3	2	15	17	2	15	17
நுவரெலியா	4	11	15	-	-	-	4	11	15	-	-	-
இரத்தினபுரி	39	121	160	-	-	-	39	121	160	-	-	-
வவுனியா	5	15	20	-	-	-				5	15	20
மொத்தம்	**88**	**303**	**391**	**3**	**-**	**3**	**61**	**258**	**319**	**30**	**81**	**111**
கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம் - கட்டுபெத்த	158	3	161	-	-	-	158	3	161	-	-	-
மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம் - கட்டுபெத்த	785	10	795	-	-	-	638	10	648	147	-	147
பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் - கட்டுநாயக்க	3	24	27	1	-	1	-	-	-	2	24	26
மொத்தம்	**1,034**	**340**	**1,374**	**4**	**-**	**4**	**857**	**271**	**1,128**	**179**	**105**	**284**

மாவட்ட ரீதியில் தேசிய நிறுவனங்களில் நடைபெறும் பகுதி நேர பாடநெறிகளுக்காக இணைத்துக் கொண்டுள்ள பயிலுநர்களின் பயிற்சிகள் தொடர்பான சுருக்கத்தை மேற்படி அட்டவணை காட்டுகின்றது. 7 மாவட்டங்களில் பகுதி நேர பாடநெறிகள் நடாத்தப்படுவதோடு, இவ் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் 391 பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். 3 தேசிய நிறுவனங்களில் 1,374 பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட ரீதியாக 391 பயிலுநர்களும், தேசிய நிறுவனங்களில் 1,128 பயிலுநர்களும் பயிற்சியை பூர்த்தி செய்துள்ளனர். மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் பகுதி நேர பாடநெறிகளுக்காக 111 பயிலுநர்கள் மேலும் பயிற்சியில் ஈடுபடுவதோடு, தேசிய நிறுவனங்களில் 284 பயிலுநர்கள் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.


வரைபு - 04 பெரட்டோ பகுப்பாய்வு (அமைவிட மைய பயிற்சியளிப்பு)



அமைவிட மைய அடிப்படையிலான பயிற்சியின் மூலம் மாவட்டத்தில் பயிலுநர்களின் பாடநெறிகளுக்காக காணப்படும் கேள்வி இப் பெரட்டோ பகுப்பாய்வு வரைபின் மூலம் காட்டப்படுகின்றது.


இங்கு கணனி வரைபட வினைஞர் பாடநெறிக்காக ஆகக் கூடிய கேள்வி நிலவுகின்றது என்பதை இனங்காண முடிகிறது. மேலும், பிரதானமாக அழகுக்கலை நிபுணர், தாதி உதவியாளர், பிரத்தியேக செயலாளர் (ஆங்கிலம்) பாடநெறிகளில் பயிலுநர்கள் அதிகளவில் காணப்படுகிறது.

வரைபு - 05 பெரட்டோ பகுப்பாய்வு (கைத்தொழில் மைய பயிற்சியளிப்பு)



மீளாய்வாண்டில் மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் கைத்தொழில அடிப்படையிலான பயிற்சியளித்தல் பாடநெறிகளுக்கு நிலவும் கேள்வி மாற்றம் இவ்வரைபின் மூலம் காட்டப்பட்டுள்ளது. இங்கு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கான பாடநெறிக்கு அதிக கேள்வி நிலவுவதோடு, மோட்டார் வாகன இயந்திர வல்லுநர், ஆடை தைப்பவர் பாடநெறிகளுக்கு பயிலுநர்கள் அதிகமாக ஆர்வத்தை காட்டுகின்றனர்.


வரைபு - 06 பெரட்டோ பகுப்பாய்வு (தேசிய நிறுவனங்கள்)



பெரட்டோவின் பகுப்பாய்வுடன் கூடிய மேற்படி வரைபின் மூலம் தேசிய நிறுவனங்களில் அதிகமான கேள்வி நிலவும் பாடநெறிகள் தொடர்பான விளக்கத்தை பெற்றுக் கொள்ள முடியும்.


இங்கு மோட்டார் வாகன இயந்திர வல்லுநர் பாடநெறிக்காக அதிக கேள்வி நிலவுவதை காட்டுகின்றது.

வரைபு - 07 வேலையுடனான பயிற்சியின் கடந்த ஆண்டுடனான ஒப்பீடு



கடந்த ஆண்டுகளில் வேலையுடனான பயிற்சிக்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் மாறுபாடு மேற்படி வரைபின் மூலம் காட்டப்படுகின்றது. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் குறைந்த ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருப்பினும், இவ்வாண்டு 9,797 பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீண்டும் வளர்ச்சியினை அடைவதற்கு எமது நிறுவனத்தால் முடிந்தது.

வரைபு 8 சூ எந்திரசாலைப் பயிற்சியின் கடந்த ஆண்டுடனான ஒப்பீடு



எந்திரசாலை பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு மேற்படி வரைபின் மூலம் காட்டப்படுகின்றது.

7 வருடகாலமாக பயிலுநர்கள் ஆட்சேர்ப்பில் ஏற்பட்ட மாற்றங்களை வெளிக்காட்டுவதோடு, ஆரம்பிக்கப்பட்டு சில வருடங்களில் தொடர்ச்சியான வளர்ச்சி வேகத்தை காட்டியதோடு, கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஆட்சேர்ப்பில் குறைவினைக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், ஆகக் கூடிய ஆட்சேர்ப்பான 13,561 பயிலுநர்கள் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் துரித வளர்ச்சியைக் காட்டுகின்றது.

அட்டவணை 9 : பரீட்சை, மதிப்பீடுகள் மற்றும் சான்றிதழ் வழங்குதல்

சான்றிதழ் வகை		நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை		இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த வர்களின் எண்ணிக்கை		வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை	
		2021	2022	2021	2022	2021	2022
தேசிய தொழிற் தகைமை	அமைவிட மைய	3,007	2,661	724	2,643	1,355	6,332
	கைத்தொழில் மைய	695	2,534	653	2,532	1,537	2,128
	முன்னர் அறிவு, பின்னர் மதிப்பீடு	2,571	8,559	2,448	8,235	4,237	7,908
கைத்தொழில் வினைஞர்	அமைவிட மைய	24	139	14	113	1,460	-
	கைத்தொழில் மைய	1,208	2,487	1,093	2,291		2,389
அமைவிட வினைஞர்		270	865	261	836	270	805
கிராமிய மட்டம்		45	307	36	299	116	382
பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம்		341	347	341	345	392	392
மோட்டார் வாகன எந்திரவியல் பயிற்சி நிறுவனம்		76	341	76	341	81	456
கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம்		68	171		141		142
விசேட கைத்தொழில் பயிற்சி (NDT/HND)		5,213	8,812	5,213	8,812	2,625	502
வேலையுடனான பயிற்சி		-	-	-	-	2	-
ஏனையவை (NCICT/NDICT/CELV/SLCCL/NTT/Other)		247	1,074	197	820	287	992
பல்நோக்கு அபிவிருத்தி பணிக்குழு				6,384	28,608		33,138
மொத்தம்		**13,765**	**28,297**	**17,440**	**56,016**	**12,362**	**55,566**

மேற்படி அட்டவணையானது பரீட்சிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பரீட்சைகளை நடாத்துதலும், சான்றிதழ்களை வழங்குதலும் குறித்த சுருக்கமான பகுப்பாய்வொன்றினை காட்டுகின்றது. இங்கு தொழிற் தகைமையின் இறுதிப் பரீட்சைக்காக 28,297 பயிலுநர்கள் பங்குபற்றியுள்ளதோடு, அவற்றில் 27,408 பயிலுநர்கள் தொழிற் தகைமை பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். அதனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 16மூ ஆன வளர்ச்சியைக் காட்டுகின்றது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 55,566 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 10 - தேசிய திறன்கள் தராதரத்தினதும் பாடத்தொகுதி மேம்படுத்தலினதும் பெறுபேறுகள்

செயற்பாடு	மேம்படுத்தப்பட்ட எண்ணிக்கை	நிறைவேற்றப்பட்ட எண்ணிக்கை	புதுப்பிக்கப்பட்ட எண்ணிக்கை
தேசிய திறன்கள் தராதரங்கள் மற்றும் பாடத்தொகுதி	17	44	26
மதிப்பீட்டு வளங்கள்	2		
பயிற்சி தராதரம்	1		
பரீட்சை வினாத்தாள்கள்	8		
கற்றல் வழிகாட்டி பாடநூல்கள்			
மொத்தம்	**28**	**44**	**26**

தேசிய திறன்கள் தராதரத்தினையும், பாடத்தொகுதிகளை மேம்படுத்தலையும் மதிப்பாய்வு செய்து அப் பெறுமானங்களை கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளமையை இவ் அட்டவணை காட்டுகின்றது. இங்கு மீளாய்வாண்டில் பல்வேறு தொழிற் பயிற்சி துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தி பாடத்தொகுதிகளுக்காக 28 தேசிய திறன்கள் மற்றும் பாடத்தொகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, 44 திறன்கள் தராதரம் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு, கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 12 திறன்கள் தராதரம் மேலதிகமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் விசேட நிகழ்ச்சித் திட்டங்களும் தகவல்களும்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையும் Outreach Projects (Guarantee) Limited நிறுவனத்துடன் இணைந்து 250 இளைஞர் யுவதிகளுக்கான பயிலுநர் பயிற்சி முறையின் கீழ் பயிற்சியை பெற்றுக்கொள்ளல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடுதலானது கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதன் கீழ் கள உதவியாளர் (விவசாய), காய்ச்சி இணைப்பவர், முதியோர் பராமரிப்பு, அலுமினிய தயாரிப்பு வினைஞர், மின்னியலாளர் மற்றும் உணவக ஊழியர்கள் ஆகிய துறைகளின் கீழ் NVQ III மட்டத்திலான சான்றிதழை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு, பாடநெறியின் காலம் 6 மாதங்களாகும். பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் இளைஞர் யுவதிகளுக்காக Outreach Projects (Guarantee) Limited நிறுவனத்தின் மூலம் கொழும்பு, காலி, அனுராதபுரம், அம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தொழில்கள் வழங்கப்படவுள்ளன.

பியகம மாவட்டம் 306 B2 சிங்க சமூகத்தினரால் நிர்மாணிக்கப்படும் திறன்கள் பயிற்சி நிறுவனம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து பயிற்சி பாடநெறிகளை ஆரம்பித்தல் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல் பிரதான அலுவலகத்தில் நடைபெற்றது. வலயத்திற்கு ஏற்ற திறனாளர்களை உருவாக்குதலும் தற்போது சேவையிலிருக்கும் பணிக்குழுவிற்காக திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதலும் விழிப்புலனற்ற சமூகத்தினருக்கான பயிற்சி பாடநெறிகளை நடாத்துதலும் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான குறிக்கோள்களாகும்.

நைட்டா நிறுவனத்தின் கீழ் செயற்படும் கட்டுபெத்த கைத்தொழில் பொறியியலாளர் பயிற்சி நிறுவனத்தில் கொரியா மொழிப் பாடநெறியானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலாம் கட்டமாக கட்டுபெத்த கைத்தொழில் பொறியியலாளர் பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களுக்கு இப்பாடநெறியை பயிலுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதோடு, எதிர்வரும் காலங்களில் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான பாடநெறிகள் ஒழுங்கமைக்கப்படவுள்ளது.

Glocal Fair 2022 தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் நடமாடும் சேவை காலி சமனல மைதானத்தில் நடாத்தப்பட்டது. தொழிலுக்காக சரியான வழிகாட்டியாக திகழும் பயிலுநர் பயிற்சிகளுக்காக பிரவேசித்தல், தொழிற் தகைமைகளை பரீட்சித்தல், NVQ சான்றிதழ்களை வழங்குதல், தொழிற் பயிற்சிகள் ஆகிய சேவைகளுடன் தொழில் வழிகாட்டி சேவையும் இதன் மூலம் நடாத்தப்படுகின்றது.

எமது நாட்டில் நடைமுறையிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய பணிப்பாளர் வைத்தியர் கப்பில மல்லவஆரச்சி அவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில் ஒரு முன்னோடி கருத்திட்டமாக நோயாளர்களுக்குத் ''தரமான உணவு வேளையொன்றை நட்புறவுடனும் கௌரவமாகவும் வழங்குதல்'' என்ற தலைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் தற்போது வைத்தியசாலையில் சிறப்பான முறையில் நடைமுறையில் இருந்து வருகின்றது. இங்கு உணவுகளை விநியோகிக்கும் பிரிவு, உணவு தயாரிப்பு பிரிவு, இவற்றை மேற்பார்வை செய்வதற்கான பிரிவு என மூன்று பிரிவுகளுக்குமான உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கும் பணிகள் மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிமேதகு சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் கொழும்பு றோயல் கல்லூரியில் மாவட்டம் 306-C-2 லியோ சமூகத்தினரால் ''லியோ தினய'' நடாத்தப்பட்டதோடு, அங்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் அவ் விழாவிற்கு சமாந்தரமாக கல்வித் தகவல்களுடன் கூடிய கண்காட்சிக் கூடமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஹொரண நகர சபை மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபைக்கும் இடையே கணனி வரைபட

வினைஞர் NVQ 4 ஆம் மட்டத்தினை நடாத்துவதற்கான புதிய புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. மேலும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை மற்றும் Drone Pilots Association (LDPA) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையின் படி வறுமை நிலையிலுள்ள குடும்பங்கள் ஒரு இலட்சத்தினை தெரிவு செய்து பயனாளிகளுக்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஊடாக NVQ 3 ஆம் மட்டத்திற்கான பயிற்சிகளை வழங்கி அவர்களை தொழில்களில் இணைப்பது எமது பிரதான கருத்திட்டமொன்றாகும். இதன் முதற் கட்டமாக இதுவரையில் அதிகார சபையின் ஊடாக 34,000 பயனாளிகளுக்கு கைத்தொழில் மைய பயிலுநர் பயிற்சி முறையின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இக் கருத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 4,500 பயனாளிகளுக்கு "யானைகளுக்கான மின் வேலிகளை பராமரிக்கும் உதவியாளர;" பாடநெறி தொடர்பாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்துடன் NVQ 3 ஆம் மட்டத்திற்கான பயிற்சிகளை வழங்கும் ஆரம்ப விழாவானது அம்பாறை உகன பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்டது.

உள்நாட்டு – வெளிநாட்டு தாதி மற்றும் சுகாதார பணிக்குழுவிற்கான தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்காக NAITA இனால் அபிமானத்துடன் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட தாதி மற்றும் சுகாதார சேவைகள் பயிற்சி கல்வி நிறுவனத்தின் (Institute Of Nursing) Health Care Studies - (INHCS) கட்டுப்பாட்டாளர் குழுவிற்கும் போதனாசிரியர்கள் குழுவிற்குமான நியமனக் கடிதங்கள் கௌரவ இராஜாங்க அமைச்சரும், விசேட வைத்தியருமான சீதா அரம்பேபொல அவர்களின் தலைமையில் வழங்கப்பட்டன.

நாட்டிற்குத் தேவையான பயிற்சி பெற்ற படையணியை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு சமாந்தரமாக நைட்டா நிறுவனம், தேர்ச்சி மிக்க வினைத்திறன் உடைய இளைஞர் தொழிற் படையை உருவாக்கும் பொருட்டு தனியார் துறையின் பங்களிப்பினை தொழிற் பயிற்சிக்குப் பெற்றுக் கொள்ளும் விசேட தேசிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் கீழ் ஹோட்டல் துறைக்கு அவசியமான தொழில்சார் ஊழியர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையும் Browns Hotels & Resorts தனியார் கம்பனிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. மேலும், தனியார் வைத்தியசாலை துறைக்கு அவசியமான திறனாளர்களை உருவாக்கும் நோக்கில் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையும் The Lanka Hospital Corporation PLC இற்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

வினைத்திறனான இளைஞர் ஊழியப்படையணியை உருவாக்கும் பொருட்டு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையும், கீல்ஸ் பல்பொருள் சிறப்பங்காடி அமைப்பும் இணைந்து நிர்மாணிப்பு செய்த Supermarket Model Basic Training Center ஆரம்பிக்கப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டு தொழிற் சந்தையில் அதிக கேள்வி நிலவும் "பல்பொருள் சிறப்பங்காடி வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (Super Market customer service Assistant) என்ற பதவிக்குத் தேவையான பயிற்சியை வழங்குவதற்கு ளுரிநசஅயசமநவ ஆழனரடந ஒன்றாகவும், ஆரம்ப பயிற்சி நிலையம் மற்றும் மதிப்பீட்டு நிலையம் (யுளளநளளஅநவெ ஊநவெநச) என இதனை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1971 ஆம் ஆண்டிலிருந்து இந்நாட்டில் நடைமுறையிலிருக்கும் பயிலுநர் பயிற்சி முறை மற்றும் தற்போது நடைமுறையிலிருக்கும் NVQ முறையை பயிலும் நோக்கில் நேபாள அரச தூதரக அதிகாரிகள் எமது அதிகார சபைக்கு வருகை தந்தனர். இச் சந்தர்ப்பத்தின் போது இரு தரப்பினருக்கும் இடையில் ஞாபகார்த்த பரிமாற்றமும் மேற்கொள்ளப்பட்டது. கல்வியும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் கௌரவ சீதா அரம்பேபொல அவரின் எண்ணக்கருவிற்கு அமைய க.பொ.த.

(உ/த) பொறியியல் தொழில்நுட்பத்தையும் உயிரியல் முறைமை தொழில்நுட்பத்தை பயிலும் மாணவர்களுக்கு பயிலுநர் கைத்தொழில் மைய பயிற்சியின் பின்னர் தேசிய தொழிற் தகைமை 4 ஆம் மட்ட சான்றிதழை (NVQ 4) வழங்கும் நிகழ்ச்சித் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

லக் ரஜய மற்றும் அவுஸ்திரேலியா அரசும் இணைந்து அவுஸ்திரேலியா அரசின் நன்கொடையின் கீழ் செயற்படும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எமது அதிகார சபை, ஹோட்டல் மற்றும் சமய அனுட்டானங்கள் துறையில் பயிற்சியை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை விரிவாக்குவதற்கு புதிய நிகழ்ச்சித் திட்டத் தொகுதியை நடைமுறைப்படுத்தும் பொருட்டு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. அக் கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பிரதான நிகழ்ச்சித் திட்டமொன்றான “Supreme Chef” றியாலிட்டி நிகழ்ச்சித் திட்டத்தின் 3 ஆம் கட்டத்தின் ஆரம்ப விழா கெணிமடல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA), இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபை (VTASL) , தேசிய இளைஞர் சேவைகள் சபை (NYSC)” தொன் பொஸ்கோ நிறுவனம், மியாமி நிறுவனம், ளுடுஜவுர்ஆ ஆகிய நிறுவனங்களில் ஊாநக பாடநெறியை பயிலும் இளைஞர் யுவதிகள் இப் போட்டித்தொடரின் போட்டியாளர்களாக கலந்து கொண்டனர்.

நாட்டில் முதல் முறையாக தேசிய தொழில் மதிப்பீட்டு முறையில் Hair Cutting Gents - Fashionable Hair dressing தொழிலை புரிபவர்களுக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் மதிப்பீட்டு சான்றிதழையும் (National Trade Test Certificate), Hair Dresser, Beautician மற்றும் Bridal Dresser ஆகிய தொழில்களில் ஈடுபடுபவர்களை சீடு முறையின் கீழ் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழிற் தகைமை சான்றிதழையும் (NVQ) வழங்கும் நோக்கில் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைக்கும் Dreamron College of Art & Beauty (Pvt) Limited நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

SSW வீசா வகுதியின் கீழ் யப்பானில் தொழிலை பெற்றுக் கொள்வதற்கு இந்நாட்டு இளைஞர் யுவதிகளுக்கு வசதிகளை வழங்குவதற்கு எமது அதிகார சபை முனைந்து குறித்த மொழித் தேர்ச்சியுடன் இளைஞர் யுவதிகளுக்கு உதவும் நோக்கில் முதலாம் கட்டமாக மேல் மாகாணத்தில் மாணவர்களுக்காக நிகழ்நிலை பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டமானது எமது பிரதான அலுவலகத்தில் கெணிமடல காட்சியறையில் வெப் ஒலிப்பரப்பாகும் நிகழ்நிலை நிகழ்ச்சித் திட்டமொன்றாக நடைபெறுகிறது. அதனை கன்காணிப்பு செய்வதற்காக JICA (யப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவர் நிறுவனம்) நிறுவனத்தின் முகவர்கள் வருகை தந்தனர்.

எமது அதிகார சபைக்கும் Archnix நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. தகவல் தொழில்நுட்ப பிரிவில் NAITA பயிலுநர்களுக்கு முறையே வெப் மற்றும் பிரயோக மொழி அறிவினை விருத்தி செய்து அப் பிரிவில நடைமுறையில் இற்றைப்படுத்திய அறிவை வழங்கி உயர் மட்டத்திலான தொழிற் சந்தைக்கு பிரவேசிப்பதற்கான நுழைவாயிலை ஏற்படுத்திக் கொடுப்பதே இதன் பிரதான குறிக்கோளாகும்.

2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி திட்டங்களும் இலக்குகளும்

- 2023 ஆம் ஆண்டிற்காக 54,400 பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்தலும், பயிற்சியளித்தலும்.
- 10,000 பயிலுநர்களுக்கு அரசு அல்லது தனியார் துறையில் வேலையுடனான பயிற்சியை வழங்குதல்.
- விசேட கைத்தொழில் பயிற்சியின் கீழ் உயர்தர தொழில்நுட்ப பாடத் துறையை பயிலும் 5,000 பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்தலும், பயிற்சியளித்தலும்.
- 13 வருட கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 700 பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.
- மேம்படுத்தல் மற்றும் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- பாடத்தொகுதிகளை (Module) விநியோகிப்பதற்கு செயற்பாடுகள் தொகுக்கப்பட்டுள்ளன.
- பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்களுக்கு மாவட்ட மட்டத்தில் 25 சான்றிதழ் வழங்கும் வைபவங்களை நடாத்துதல்.
- NVQ – RPL முன்னர் அறிவு பின்னர் மதிப்பீடு என்பதன் கீழ் சான்றிதழ்கள் வழங்குதல்.
- NVQ சான்றிதழ் பெறுநர்களுக்கு மாவட்ட மட்டத்தில் தொழில்முனைவு பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- போதனாசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- 3 தேசிய நிறுவனங்களில் 3 சான்றிதழ் வழங்கும் வைபவங்களை நடாத்துதல்.

அட்டவணை 11 : பணிக்குழுவின் தகவல்

பதவி	அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவினரின் எண்ணிக்கை	2022/12/31 ஆம் திகதியில் உள்ளவாறான பணிக்குழு
பணிப்பாளர் நாயகம்	1	1
பணிப்பாளர்	5	3
பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்	18	15
உள்ளக கணக்காய்வாளர்	1	1
பணிப்பாளர் / அதிபர்	3	2
பிரதி அதிபர்	6	3
விரிவுரையாளர்	49	32
மாவட்ட அதிகாரி	25	24
பயிற்சி அதிகாரி	62	39
நிர்வாக உத்தியோகத்தர்	8	4
செயலாளர் / சட்ட உத்தியோகத்தர்	1	0
கணக்கு உத்தியோகத்தர்	6	5
உள்ளக கணக்காய்வு	1	0
வாகனம் புதுப்பிததல் அலகு சேவை உத்தியோகத்தர்	1	0
தரநிர்ணய சான்றுப்படுத்தும் உத்தியோகத்தர்	4	4
பெறுகை உத்தியோகத்தர்	1	1
முறைமை நிர்வாக கட்டுப்பாட்டாளர்	1	1
தரவுக் களஞ்சிய நிர்வாக கட்டுப்பாட்டாளர்	1	0
புள்ளிவிபரவியலாளர்	1	1
பரீட்சகர்	462	378
போதனாசிரியர்	122	60
நூலகர்	3	1
முறைமை பகுப்பாய்வாளர்	3	2
போக்குவரத்து உத்தியோகத்தர்	1	0
தொழில்நுட்ப உத்தியோகத்தர்	1	1
மொழிபெயர்ப்பாளர்	2	0
புத்தகங்களை பேணுபவர்	4	2
கட்புலனற்றோர் தொழினுட்பவியலாளர்	3	1
தொழில்நுட்ப வரைபடவியலாளர்	3	0
திட்டமிடல்வியலாளர்	1	1
உதவி போதனாசிரியர்	44	0
ஆய்வுகூட உதவியாளர்	12	6
முகாமைத்துவ உதவியாளர்	260	248
கணனி வரைபடவியலாளர்	2	2
விடுதி கட்டுப்பாட்டாளர்	2	1
சாரதி மற்றும் அலுவலக உதவியாளர்	40	40
லித்தோ இயந்திர இயக்குநர்	4	3
அச்சு இயந்திர இயக்குநர்	2	0
புத்தக கட்டுநர் மற்றும் வெட்டுபவர்	4	4
திறன் கைத்தொழில் வினைஞர்	21	18
அலுவலக சேவை உதவியாளர்	71	71
மொத்தம்	**1262**	**975**

மீளாய்வாண்டில் நிறுவனத்தின் பணிக்குழுவினர் தொடர்பாக சுருக்கமான தகவல் மேலேயுள்ள அட்டவணை காட்டுகின்றது. இங்கு அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 1262 ஆகும். 2022 ஆம் ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவின் எண்ணிக்கையில் 77மூ பூர்த்தி செய்யப்பட்டு 975 பணிக்குழுவினர் எமது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றனர்.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

சொத்துக்கள்	குறிப்பு	**2022** (ரூ.)		**2021** (ரூ.)	
நடைமுறை அல்லாத சொத்துக்கள்					
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	2	2,460,268,437.00		2,495,481,182.86	
தொழிற்படு மூலதனம்	3	61,232,419.42	2,521,500,856.42	37,074,048.96	2,532,555,231.82
நடைமுறை சொத்துக்கள்					
சரக்கிருப்பு	4	24,275,812.66		11,629,513.52	
பெறவேண்டியவை	5	131,348,069.29		100,724,146.52	
வைப்புக்கள், முற்கொடுப்பனவுகளும், முற்பணங்களும்	6	48,520,999.64		53,838,156.05	
குறுங்கால முதலீடுகள்	7	96,185,462.10		89,126,251.12	
இடமாற்றப்படும் காசு	8	10,610.00		1,798,041.90	
காசு மற்றும் காசுக்கு சமனானவை	9	212,971,222.33	513,312,176.02	164,899,469.26	422,015,578.37
மொத்தச் சொத்துக்கள்			**3,034,813,032.44**		**2,954,570,810.19**
உரிமையாண்மையும், பரிப்புக்களும்					
திரண்ட மிகை/ (பற்றாக்குறை)	11	875,698,731.71		855,550,267.17	
திரண்ட மிகை பகுதி நேரம்	11a	42,671,516.72		42,671,516.72	
ஒதுக்கங்கள்	11b	748,585,112.32		638,668,797.82	
அரசாங்க கொடைகள் - மூலதனம்	11c	7,231,251.52		7,231,251.52	
அரசாங்க கொடைகள் - SSDP	11d	62,789,506.99		62,789,506.99	
பிற்போடப்பட்ட வருமானம்	13	812,473,591.64	2,549,449,710.90	897,154,441.03	2,504,065,781.25
நடைமுறை அல்லாத பரிப்புக்கள்					
பணிக்கொடைகளுக்கான ஏற்பாடு	12	256,184,549.12	256,184,549.12	252,257,655.00	252,257,655.00
நடைமுறை பரிப்புக்கள்					
செலுத்த வேண்டியவை	10		229,178,772.42	198,247,373.94	198,247,373.94
மொத்த உரிமையாண்மையும், பரிப்புக்களும்			**3,034,813,032.44**		**2,954,570,810.19**

கணக்கீட்டுக் கொள்கைகளையும், பக்கம் 8 தொடக்கம் 19 வரையில் குறிப்புகளின் படிவங்களையும் இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதியொன்றாக கவனத்தில்கொள்ளப்படுதல் வேண்டும்.

சான்றுப்படுத்தல்

1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்கங் கொண்ட சட்டத்தின் தேவைப்பாட்டிற்கும், இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமத்திற்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என சான்றுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான பொறுப்பு முகாமைத்துவச் சபையுடன் தொடர்புடையது.

இந்த நிதிக் கூற்று முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்துடன் அவர்களுக்கு பதிலாக ஒப்பமிடப்பட்டுள்ளது.

.....	.....
டப் எம் ஏ கே வீரசேகர	டப் ருச்சிக அமரசேகர
பணிப்பாளர் (நிதி)	தலைவர் / பிரதான நிறைவேற்றுநர்
.....	.....
கலாநிதி காஞ்சன சில்வா	டீ ஆர் சோமவர்தன
பணிப்பாளர் சபை உறுப்பினர்	பணிப்பாளர் சபை உறுப்பினர்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று

விபரம்	குறிப்பு	2022 (ரூ.)	2021 (ரூ.)
தொழிற்பாட்டு வருமானம்			
அரசாங்க கொடைகள் - மீண்டெழும்		1,188,500,000.00	1,093,500,000.00
அரசாங்க கொடைகள் - மூலதனம்		67,950,000.00	-
மூலதனக் கொடை - பரிமறாற்றமும் பரிமறாற்றப்படாததும்			
பெறப்பட்ட மூலதனக் கொடை – பரிமறாற்றம்		52,629,414.01	-
பெறப்பட்ட மூலதனக் கொடை – பரிமறாற்றப்படாத		12,755,731.58	-
அரசாங்க கொடைகள் - மூலதன புத்துருவாக்கம்		-	8,990,978.79
சுயஉழைப்பு வருமானம்	11a	-	-
மாற்றப்பட்ட பிற்போடப்பட்ட வருமானங்கள்	13	84,680,849.39	84,680,849.37
ஏனைய வருமானங்கள்			
திறன்விருத்திப் பிரிவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		11,878,383.50	28,829,335.01
ஏனைய மானியங்கள்	14	328,000.00	137,075.00
ஒரு இலட்சம் தொழில்வாய்ப்புகள் நிகழ்ச்சித் திட்ட நிதி		15,183,000.82	88,823,618.04
அமைச்சின் மானியங்கள் - திறன்விருத்தி சிசு சவிய நிகழ்ச்சித் திட்டம்		39,447,600.00	15,819,000.00
SDVE மானியம் - அமைச்சின் செயலாற்றுகை கொடுப்பனவு		41,130,788.50	-
ஏனைய வருமானங்கள்	15	148,583,986.67	78,309,067.10
மொத்த வருமானங்கள்		**1,663,067,754.47**	**1,399,089,923.31**
தொழிற்பாட்டு செலவுகள்			
பயிற்சி பயன்பாட்டு உபகரணங்கள்	16	14,901,561.15	14,367,681.27
ஏனைய பயிற்சி செலவுகள்	17	249,011,364.03	184,330,473.80
பணிக் குழுவிற்கான செலவுகள் - தனிப்பட்ட வேதனங்கள்	18	835,468,760.28	739,442,023.76
பணிக் குழுவிற்கான செலவுகள் - ஏனையவை	19	45,763,394.74	25,227,389.43
போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்	20	87,485,755.87	70,611,989.38
வழங்கல்கள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள்	21	18,227,472.65	17,709,596.44
அச்சுப் பொருட்களும் அச்சீட்டுக் கிரயமும்	22	1,613,529.86	-
உபகரணங்களின் பராமரிப்பு	23	8,357,623.81	7,764,529.91
சூழல் பராமரிப்பு	24	161,659,549.36	157,983,472.86
நிதி மற்றும் ஏனைய செலவுகள்	25	3,281,023.11	6,312,258.21
தேய்வுகள்	26	229,293,332.66	231,946,085.35
கணக்காய்வுக் கட்டணம்		1,288,650.00	1,171,500.00
மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள்		**1,656,352,017.52**	**1,456,867,000.41**
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் தேறிய மிகை (பற்றாக்குறை)		**6,715,736.95**	**(57,777,077.10)**
மிகை / பற்றாக்குறை தொடர்பாக திரண்ட கூற்று			
நைட்டா நிதி			
முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு சனவரி மாதம் 1 ஆந் திகதியில்		1,128,256,041.29	1,151,839,418.43
கடந்த ஆண்டின் செம்மையாக்கம்		13,432,727.59	(23,583,377.14)
ஆண்டின் இறுதி மீதி		1,141,688,768.88	1,128,256,041.29
கடந்த ஆண்டில் நிறுத்தி வைத்த உழைப்பு		(272,705,774.12)	(214,928,697.02)
பகுதி நேரம்			
முன்னர் அறிக்கையிடப்பட்டவாறு சனவரி மாதம் 1 ஆந் திகதியில் பகுதிநேர		42,671,516.72	42,671,516.72
கடந்த ஆண்டின் செம்மையாக்கம்		-	-
மீளாய்வாண்டின் செம்மையாக்கம்		-	-
மீள குறிப்பிட்டுள்ளவாறு சனவரி மாதம் 1 ஆந் திகதியில்		911,654,511.48	955,998,860.99
குறித்த காலத்திற்கான தேறிய மிகை / (பற்றாக்குறை)		6,715,736.95	(57,777,077.10)
டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் தேறிய மிகை / (பற்றாக்குறை)		**918,370,248.43**	**898,221,783.89**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்டநிதி காசுப்பாய்ச்சல் கூற்று

விபரம்	குறிப்பு	2022 (ரூ.)		2021 (ரூ.)	
தொழிற்பாட்டு நடவடிக்கைகள்					
குறித்த காலப்பகுதிக்கான மிகை (குறை)			6,715,736.95		(57,777,077.10)
செம்மையாக்கங்கள் :					
தேய்வுகள்		229,293,332.66		231,946,085.35	
பிற்போடப்பட்ட வருமானங்கள்		(84,680,849.39)		(84,680,849.37)	
அகற்றப்பட்ட ஆதனத்திற்கான நட்டம்		-		2,125.06	
அகற்றப்பட்ட ஆதனத்திற்கான இலாபம்		(13,683.53)		(3,148.79)	
அறவிடமுடியாத பணிக்குழு கடன்		377,797.00		(68,671.00)	
அறவிடமுடியாத பல்வேறு கடன்பட்டோர்		(345,970.21)		(20,785.09)	
பெறப்பட்ட மூலதனக் கொடை – பரிமறாற்றப்படாத		(12,755,731.58)		-	
நிலையான வைப்புக்களினால் பெறப்பட்ட வட்டி		-2,237,367.30		(8,990,978.79)	
அட்டுறுவிற்கான மிகையாகாத ஏற்பாடுகள்		-		1,957,838.47	
அட்டுறுவிற்கான மிகை ஏற்பாடுகள்		-		(9,332,580.14)	
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்		19,240,212.00		13,133,719.50	
பணிக்கொடை கொடுப்பனவுகள்		(14,189,499.50)		(21,642,310.00)	
SLGTI சொத்து மாற்றல் இலாபம்				(16,297,465.69)	
பொருட்களினால் ஏற்பட்ட நட்டம்				30,426.39	
சரக்கிருப்பு அதிகரிப்பு / குறைவு		(12,646,299.14)		2,970,786.93	
அறவிடப்பட வேண்டியவை குறை / மிகை		(30,623,922.77)		1,285,185.73	
வைப்புகள், முற்கொடுப்பனவுகளும், முற்பணங்களும் அதிகரிப்பு / குறைவு		(5,317,156.41)		(33,469,694.26)	
குறுங்கால முதலீடு அதிகரிப்பு / குறைவு		(11,035,939.90)		(8,243,558.95)	
செலுத்தப்பட வேண்டியவை அதிகரிப்பு / குறைவு		30,931,398.48		(28,080,543.57)	
			105,996,320.41		40,495,581.78
தொழிற்பாட்டு நடவடிக்கைகளினால் உழைக்கப்பட்டத் தேறிய காசுப் பாய்ச்சல்			112,712,057.36		(17,281,495.32)
முதலீட்டு நடவடிக்கைகள்					
ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு		(32,746,962.11)		(47,734,963.35)	
தொழிற்படு மூலதனங்கள்		(24,158,370.46)		(4,298,208.33)	
நிலையான சொத்து விற்பனை முன் கொணரப்பட்டது				-	
பிற்போடப்பட்ட வருமானங்களின் செம்மையாக்கங்கள்			(56,905,332.57)		(52,033,171.68)
முதலீட்டு நடவடிக்கைகளினால் உழைக்கப்பட்டத் தேறிய காசுப் பாய்ச்சல்			(56,905,332.57)		(52,033,171.68)
நிதிசார் நடவடிக்கைகள்					
அரசாங்கத்தின் மூலதனக் கொடை		-		40,096,000.00	
SSDP மூலதனம்		-		-	
பெறப்பட்ட மானியங்கள்		-		17,799,956.50	
பெறப்பட்ட வைப்புக்களின் வட்டி		(13,499,132.54)		2,281,693.10	
			(13,499,132.54)		60,177,649.60
நிதிசார் நடவடிக்கைகளினால் உழைக்கப்பட்டத் தேறிய காசுப் பாய்ச்சல்					60,177,649.60
தேறிய காசு மற்றும் காசுக்கு சமமானவை அதிகரிப்பு / குறைவு			42,307,592.25		(9,137,017.40)
குறித்த காலப் பகுதியின் ஆரம்ப காசு மற்றும் காசுக்கு சமமானவை			184,407,590.49		193,544,607.89
குறித்த காலப் பகுதியின் இறுதி காசு மற்றும் காசுக்கு சமமானவை			**226,715,182.74**		**184,407,590.49**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
உரிமைத்துவ மாற்றல்கள் கூற்று

விபரம்	திரண்ட நிதி	அரசாங்க மூலதனக் கொடை	SSDP மூலதனம்	பிற்போடப்பட்ட வருமான கொடை (பரிப்பு)	பெறப்பட்ட உதவிகள்	பகுதி நேர கணக்கீட்டு இலாபம்	மோட்டார் வண்டி வருமான ஒதுக்கம்	பகுதி நேரம் மீதான மூலதன ஒதுக்கம்	பகுதி நேரம் மீதான கடப்பாட்டு ஒதுக்கம்	AETI காணி மாற்றல் இலாபம்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	மொத்தம்
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியில் மீதி	**1,128,256,041.29**	**7,231,251.53**	**62,789,506.99**	**897,154,441.03**	**153,886,950.46**	**42,671,516.72**	**7,415,059.28**	**11,148,914.78**	**5,902,130.56**	**290,860,815.72**	**169,454,926.85**	**2,776,771,555.21**
					-							-
கூட்டுக : பெறப்பட்ட மானியங்கள்		-		-	-						**109,920,384.66**	**109,920,384.66**
நிறுத்தி வைத்த வருமானங்கள	(272,705,774.12)											**(272,705,774.12)**
மீள குறிப்பிடப்படும் ஆரம்ப மீதி	**855,550,267.17**	**7,231,251.53**	**62,789,506.99**	**897,154,441.03**	**153,886,950.46**	**42,671,516.72**	**7,415,059.28**	**11,148,914.78**	**5,902,130.56**	**290,860,815.72**	**279,375,311.51**	**2,613,986,165.75**
GOSL ஆண்டிற்காக பெறப்பட்ட மூலதனக் கொடை		-										-
புத்துருவாகும் மூலதனம்		-										-
ஆண்டின் இலாபம்	6,715,736.95	-										**6,715,736.95**
ஆண்டிற்கான செம்மையாக்கம்	13,432,727.59			-	-						(4,070.00)	**13,428,657.59**
மீள் மதிப்பீட்டு இலாபம்											-	-
பிற்போடப்பட்ட பரிப்பிற்கு மாற்றுதல்		-		-	-							-
பிற்போடப்பட்ட வருமானத்திற்கு மாற்றுதல்				(84,680,849.39)								**(84,680,849.39)**
2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் மீதி	**875,698,731.71**	**7,231,251.53**	**62,789,506.99**	**812,473,591.64**	**153,886,950.46**	**42,671,516.72**	**7,415,059.28**	**11,148,914.78**	**5,902,130.56**	**290,860,815.72**	**279,371,241.51**	**2,549,449,710.90**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
கணக்கீட்டுக் கொள்கைகள்

பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

1. அறிக்கையிடும் நிறுவனம்

1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (இதனகத்துப் பின்னர் நிறுவனம் எனக் குறிப்பிடப்படும்) இல. 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிகட, இராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ளது.

2. தயாரிக்கப்படும் அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளின் அடிப்படையில் நிறுவனத்தின் நிதிசார் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
நிதிசார் அறிக்கைகள் வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிசார் அறிக்கைகள் இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.1 நிதியாண்டு 2022 ஆம் ஆண்டில், Tally System மீதிகளையும், நிதிக் கூற்றுக்களின் மீதிகளையும் இணக்கம் செய்வதற்காக தேசிய ரீதியான நிலையங்களில் பகுதி நேர பாடநெறிகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் Tally System இற்கு எடுக்கப்பட்டுள்ளது.

3. ஒப்பீட்டுத் தகவல்கள்

கடந்த ஆண்டிற்கான பெறுமதிகள் குறித்த ஆண்டின் சமர்ப்பித்தல்களுடன் தொடர்புடையவாறு ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

4. அரசாங்கத்தின் கொடைகள் மற்றும் மானியங்கள்

4.1 நிறுவனத்தின் செலவுகளானது, அரசாங்கத்தின் கொடைகளின் மீது தங்கியுள்ளது அக் கொடைகள் பெறுகைகளாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவுகளுக்காக குறித்த அரசாங்கத்தின் கொடைகளானது விரிவாக வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டுள்ளதோடு, மூலதன செலவுகளுக்காக பெறுகைகள் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி நிதியில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

4.2 சொத்துக்களின் மாற்றுகையாக கிடைக்கப்பெறும் அரசாங்கத்தின் கொடைகளானது, பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதி அவற்றின் ஆயுட்காலத்தின் படி கணக்கு வைக்கப்பட்டுள்ளது. (SLPSAS 11 மற்றும் LKAS 20 இன் நியமங்களின் பிரகாரம்)

5. சொத்துகள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை

5.1 தொக்குகள்

தொக்கானது பொதுவாக கிரய அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. வழக்கிழந்த அச்சீட்டு பொருட்களின் தொக்கிற்காக 5% ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

5.2 பெறுகைகள்

அறவிடப்பட வேண்டிய தொகைகள் அவ்வாறே காட்டப்பட்டுள்ளதோடு, 2022.12.31 ஆந் திகதியின் போது அதிகார சபையில் சேவையாற்றாத பணியாளர்களின் ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடனுக்காக 100% ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. உள்ளக ரீதியான கொடுக்கல்வாங்கல்களில் அறவிடப்பட வேண்டிய கடன் தவிர்ந்த ஏனைய அனைத்து கடன்பட்டோர்களுக்காக 5% ஏற்பாடு அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடனுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

(I) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஏற்பிசைவு மற்றும் அளவீடுகள்

சொத்துக்களுடன் தொடர்புடையதான எதிர்கால பொருளாதார பிரதிலாபங்கள் நிறுவனம் தொடர்ந்து ஈட்டுவதற்கான நிகழ்தகவு இருக்குமாயின், அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக இனங்கண்டு இருப்பதோடு சொத்துக்களின் கிரயமானது LKAS 16 – ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு அமைவாக உறுதியாக அளவிட முடியும். ஆரம்பத்தில், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரய அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டுள்ளது.

(II) கிரயம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயங்களில் அவற்றின் கொள்வனவுகள் மற்றும் பயன்பாட்டு நிலைக்கு கொண்டு வருவதற்காக ஏற்பட்ட நேர்க் கிரயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிகார சபையின் செயலாற்றுகையை பேணுவதற்காக அல்லது விருத்தி செய்வதற்காக நிலையான சொத்துக்களின் சுவீகரிப்பு, நீடிப்பு அல்லது விருத்தி செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னைய செலவுகளானது மூலதன செலவாகக் கருதப்பட்டுள்ளது.

(III) மீள் மதிப்பீட்டுப் படிவம் :

நிறுவனமானது ஆரம்ப இனங்காணலுக்குப் பின்னர் அளவீட்டுக்காக மேற்குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர்ந்து ஏனைய சொத்துக்களின் உரிய வகுப்பிற்கு மீள் மதிப்பீட்டு படிவத்தை பயன்படுத்துகின்றது. இலங்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டின் அடிப்படையில் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயமான பெறுமதியானது தீர்மானிக்கப்படுவதோடு, குறித்த ஆவணங்கள் இன்மையும், கால வரையறை காரணமாக முழு சொத்துக்களின் வகுப்புக்களையும் பூர்த்தி செய்வதற்கு இயலாது போனது.

சுயாதீன மதிப்பீட்டாளர்கள் மற்றும் NAITA இன் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, பொதுவான இயல்புடைய சொத்துக்களின் நடைமுறை சந்தை விலை

காணப்படும் போது, அவ்வாறான சொத்துக்களின் நியாயமானப் பெறுமதியைத் தீர்மானிக்கும் போது அவ்வாறான சான்றுகள் கவனத்தில்கொள்ளப்படும். அச் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் கொண்டு செல்லப்படும், பின்னரான காலப்பகுதியில் திரண்ட தேய்வு மற்றும் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தினத்திற்குப் பின்னர் அறவிடப்பட்ட திரண்ட நட்டஇழப்புக்களை விட குறைவு. சொத்தொன்றை மீள் மதிப்பீடு செய்யும் போது, கொண்டு செல்லப்படும் பெறுமதியில் ஏதேனும் அதிகரிப்பு வேறு விரிவான வருமானமாக இனங்கண்டு மீள் மதிப்பீட்டுக் குழுவின் கீழ் உரிமைத்துவத்துடன் சேர்க்கப்படும், அதனை வருமானக் கூற்றில் முன்னரே இனங்கண்டு அச்சொத்தின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் குறைவினை பிரதிபலிக்கும் பெறுமதியை தவிர்த்து, முன்னர் செலவிடப்பட்ட குறையும் பெறுமதிக்கான அதிகரிப்பு வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

மீள் மதிப்பீட்டில் எழும் கொண்டு செல்லப்படும் பெறுமதியின் குறைவு வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளதோடு, அச்சொத்தின் முன்னரான மேலதிகப் பெறுமதியில் ஈடு செய்யும் எந்தவொரு குறைவும் ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காண்பது அது குறித்து மீள் மதிப்பீட்டு மேலதிகப் பெறுமதியில் உள்ள எந்தவொரு கடன் மீதியின் பெறுமதிக்கேயாகும்.

சொத்தொன்று தொடர்பாக மீள் மதிப்பீட்டுக் குழுவின் எஞ்சியிருக்கும் எந்தவொரு மீதியும், ஓய்வுபெறும் போது அல்லது ஆதனங்களை அகற்றும் போது நிறுத்திவைத்த வருமானத்திற்கு நேரடியாக மாற்றப்படும். நிலையான சொத்துக்களின் சுவீகரிப்பு, நீடிப்பு அல்லது விருத்தி செய்வதற்கான அல்லது வருவாய் திறன்விருத்தி, வினைதிறன் அல்லது செயற்பாட்டின் வினைதிறனை அதிகரித்தலுக்காக ஏற்கப்படும் பின்னைய செலவுகளானது மூலதன செலவாகக் கருதப்படும். சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகள் இனங்காணப்பட்டுள்ளது.

(IV) இனங்காணப்படாதவை

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுகையில் அல்லது மாற்றுகையில் அவற்றை பயன்பாட்டின் பின் எதிர்கால பொருளாதார பிரதிலாபங்களை கொண்டவை அல்ல என இனங்காணவில்லை. சொத்துக்களை இனங்காணாததால் ஏற்படும் எந்தவொரு இலாபம் அல்லது நட்டத்தினை (தேறிய சொத்தினை அகற்றுவதனால் பெறப்படும் வருமானம் மற்றும் சொத்துக்களை கொண்டு செல்லும் பெறுமதிக்கு இடையில் காணப்படும் வேறுபாடானது பெறுமதியாகக் கணக்கிடப்படும்) மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றில் 'ஏனைய செயற்பாட்டு இலாபம்' இல் இனங்காணவில்லை.

(V) அருவச் சொத்துக்கள் - கணனி மென்பொருளை இனங்காணும் அடிப்படை

சொத்தொன்றிற்கு அறவிடக்கூடிய எதிர்கால பொருளாதார பிரதிலாபங்கள் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஈட்டிக்கொள்வதற்கான நிகழ்தகவு காணப்படும் அருவச் சொத்தொன்றாக இனங்காணப்பட்டுள்ளதோடு, சொத்துக்களின் கிரயத்தை உறுதியாக அளவீடு செய்ய முடியும்.

நிறுவனத்தினால் ஏற்கப்படும், பயன்பாட்டிற்கான உறுதிப்பத்திரத்தை பெற்றுள்ள, அதனுடன் தொடர்புடைய வன்பொருட்களுக்கு அவசியமற்ற, தெளிவாக அடையாளம் காணக்கூடிய, நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும், உறுதியாக அளவீடு செய்யக்கூடிய மற்றும் எதிர்கால பொருளாதார வருவாய்களுக்கு வழிவகுக்கும் என கருதக்கூடிய சகல கணனி மென்பொருள்

கிரயங்களும் அருவச் சொத்து வகுதியின் கீழ் நிதி நிலைமை மற்றும் குறைந்து செல்லும் திரண்ட தேய்வு மற்றும் திரண்ட சேதஇழப்பு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படும்.

(VI) குறுங்கால இருப்பேடு

மூலதனமாக்க முடியாத குறுங்கால இருப்பு உருப்படிகள் நிதி செயலாற்றுகை கூற்றிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ் உருப்படியை நிர்வகிக்கும் நோக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, பௌதீக ரீதியில் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(VII) தேய்வு

தேய்மானம் கணக்கிடப்படுவது, சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு நேர்கோட்டு முறை அடிப்படையிலாகும்.

சொத்துக்களின் வகுதி	**தேய்வு வீதம்**
குத்தகைக் காணிகள்	குத்தகை கால அடிப்படை
கட்டிடங்கள்	5%
பொறிகளும், உபகரணங்களும்	10%
தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	10%
கணனிகளும், பாகங்களும்	25%
மோட்டார் வண்டிகள்	25%
நூலக புத்தகங்கள்	10%
பயிற்சி உபகரணங்கள்	10%
அருவச் சொத்துக்கள்	10%

6. **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

கையிலுள்ள காசு, வங்கி வைப்புகள், குறுங்கால முதலீடுகள், காசு மற்றும் காசுக்கு சமமானவை என வரையறுக்க முடியும்.

கையிலுள்ள காசு மற்றும் வங்கி வைப்புகள், குறுகிய கால முதலீடுகள், இடமாற்றப்படும் காசு, காசுப் பாய்ச்சல் கூற்றின் போது காசு மற்றும் காசுக்கு சமமானவை எனக் கருதப்படும்.

7. பரிப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

ஐந்தொகையின் திகதியில் உள்ளவாறான அனைத்து பரிப்புக்களும் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, தற்போது காணப்படுவதாக கருதப்படும் பரிப்புக்களுக்காக போதுமானளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும், அவற்றின் பெறுமதியை சரியாக கணிப்பிட முடியவில்லை. கேள்விகளின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள் அல்லது ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருட காலத்தில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளானது நிதிக் கூற்றில் நடைமுறைப் பரிப்பாக கருதப்படுகின்றது. ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் நடைமுறை அல்லாத பரிப்பாக நிதிக் கூற்றில் கருதப்படுகின்றது.

8. பணிக்கொடை ஏற்பாடு

சகல பணியாளர்களுக்கும் ஆரம்ப ஆண்டிலிருந்து செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கங் கொண்ட ஏற்பாடுகள் சட்டம் மற்றும் இலங்கை நிருவாக சேவையின் 16 ஆம் பிரிவிற்கு அமைவாக, பணியாளர் ஒருவர் தொடர்ந்து 5 வருட சேவையைப் பூர்த்தி செய்கையிலேயே இப்பரிப்பானது வலுவுடையதாகும்.

9. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகைகள் செலவுகளாக வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. அதிகார சபை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) பணியாளர்களின் மொத்தச் சம்பளத்தில் 15% மற்றும் 3% இற்கு குறையாத தொகைகளை பங்களிப்புச் செய்கின்றது.

10. வருமானம்

அரசாங்கத்தினால் கிடைக்கப்பெற்ற மானியங்கள், மீண்டெழும் செலவாக பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியங்கள் மற்றும் அதிகார சபையின் பல்வேறு நிதிசார் செயலாற்றுகை கூற்றில் செலவு வைக்கப்பட்டுள்ளது. மூலதனக் கொடையிலிருந்து, பிரதான புதுப்பித்தல்கள் மற்றும் மூலதன சொத்துக்களின் அதிகரிப்பிற்காக செலவு செய்யப்பட்ட தொகையானது நிதிசார் செயலாற்றுகை கூற்றுக்கு மூலதனமாக்கம் செய்யப்படாததோடு, சமமான தொகை மூலதன கொடையிலிருந்து மாற்றப்பட்டுள்ளது.

நிலையான சொத்துக்களில் இனங்காணப்பட்ட பரிப்புகள் மற்றும் தேய்வுகளுக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் பின்னர் மிகை / பற்றாக்குறை அல்லது செலவினை மிஞ்சிய வருமானம் ஏற்பட்டது.

அதிகார சபையை செயற்படுத்துகையிலும், அதன் மூலதன சொத்துக்களை வினைத்திறனாக பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவுகளும் வருவாயில் வசூலிக்கப்படுகின்றன.

11. மூலதன பொறுப்புகள் மற்றும் உறுமுரிமை பரிப்புக்கள்

அனைத்து பொருள் ரீதியான மூலதனப் பொறுப்புகளையும், உறுமுரிமை பரிப்புக்களையும் கவனத்திற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான மாற்றங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

12. ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகளை இனங்கண்டு தேவையான சந்தர்ப்பங்களின் போது கணக்குகளில் அவசியமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

13. காசுப் பாய்ச்சல் கூற்று

பிற்போடப்பட்ட வருமானங்கள் குறைதல் / அதிகரித்தல் காசு சாராத அசைவுகளாக நிதிப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் விதிமுறைகளின் தேவைப்பாடு மீது 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) அவுஸ்திரேலியா கருத்திட்டத்தின் நிதியின் மூலமாக 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூ. 2,084,556,810 பெறுமதியான கட்டிடங்களும், பயிற்சி உபகரணங்களும் அருவச் சொத்துக்களும் மீளாய்வாண்டில் கணக்கு வைக்கப்படாமல் வெளிப்படுத்தலில் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் பயிற்சி நடவடிக்கைகளுக்காக நன்கொடையாக பெறப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தின் இறக்குமதி பெறுமதி கணக்கு வைக்கப்படாத காரணத்தினால் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களின் மீள்மதிப்பீட்டில் அவ் வாகனத்தின் தேறிய பெறுமதியான ரூ. 1,256,152 தொகையில் மீள்மதிப்பீட்டு தொகை அதிகமாகவும், மூலதன நன்கொடையில் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) அதிகார சபைக்குச் சொந்தமான ரூ. 5,280,000 பெறுமதியான 03 காணிகளின் பெறுமதியும் முல்லைத்தீவு மற்றும் கம்பஹாவில் காணப்படும் 167.5 பர்ச்சஸ் காணியின் பெறுமதியும் மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி காலக் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட ரூ. 341,726,574 பெறுமதியான காணிகள் மீளாய்வாண்டிலும், அதற்கு முந்தைய ஆண்டிலும் முறையான தேய்வு மதிப்பிடாத காரணத்தினால் ஆண்டின் மேலதிகமாகவும் ரூ. 3,261,884 திரண்ட அதிகரிப்பாகவும், காணிகள் ரூ. 6,523,768 பெறுமதி அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2021 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 500 டெப் இயந்திரங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 100,000 வேலையற்றோருக்கு பயிற்சியளிக்கும் 'Multi-Purpose Development Task Training Programme' இற்காக பலநோக்கு அபிவிருத்தி படையணி திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய தொகையான ரூ. 41,574,974 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அதிகாரசபைக்கு அச்சிட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களுக்காக அவ் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய ரூ. 20,638,200 தொகையும், அச்சு நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு செலுத்த வேண்டிய ரூ. 3,960,200 தொகையும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2017 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிர்மாணிப்பு வேலைகளை பூர்த்தி செய்திருந்த 06 ஒப்பந்தங்களின் முற்பணம் ரூ. 1,495,555 தொகையானது கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை, ரூ. 20,103,595 முற்பணத் தீர்வு கூட்டுத்தொகையானது கணக்கு வைக்கப்படாத காரணத்தினால் நடைமுறை சொத்துக்கள் ரூ. 21,599,150 இனால் அதிகரிப்பையும் கட்டிடங்களின் பெறுமதி ரூ. 1,495,555 தொகையும் புத்துருவாகும் வேலையின் பெறுமதி ரூ. 20,103,595 தொகையும் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஐ) நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூ. 31,813,587 ஆக இருப்பினும், கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பின் படி அத் தொகை ரூ. 22,300,913 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் மேலதிகத் தொகையும், 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்காக பணிக்கொடை ஏற்பாட்டு மீதி ரூ. 9,512,675 தொகையாலும் முறையாக குறைவாகவும் அதிகமாகவும் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இவ் அறிக்கையின் நிதிக் கூற்றுக்களில் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு, போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாயினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது குறித்து எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் இத்தால் கருதப்படுகின்றது. இவ் ஏனைய தகவல் குறித்து முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

எனது அபிப்பிராயத்தின் படி, நிதிக் கூற்றுக்களில் ஏனைய தகவல்கள் உள்ளடங்காததோடு, நான் அது குறித்த உறுதிப்பாட்டை அல்லது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கான, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிக்கும் போது, நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு முறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தகவல்கள்

எனது அறிவுக்கு எட்டியவரையில் பொருண்மையாக, பொருத்தமற்றதாக இருக்கின்றனவா என ஆராய்ந்து பார்ப்பது எனது பொறுப்பாகும்.

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கப்பெற்ற ஏனைய தகவல்களின் மீது, என்னால் செய்யப்பட்ட பணிகளின் அடிப்படையில், இங்கு ஏனைய தகவல்கள் பொருண்மையான முறையில் தவறாக காட்டப்பட்டுள்ளதாக என்னால் அவதானிக்கப்படுமாயின், அவ் விடயம் குறித்து என்னால் அறிக்கையிடப்படுதல் வேண்டும். இது குறித்து அறிக்கையிடுவதற்கு எனக்கு எதுவுமில்லை.

1.4 நிதிக் கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் ஆளுகை தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளின் இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல். மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத்தனம் வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

.....

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு ஆணைக்குழு முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையினது ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு சபையின் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட

ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

சட்டவிதிகள்/ பணிப்புரைகளுக்கான குறிப்பு	அவதானிப்புகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவையின் நிதி ஒழுங்குவிதி 571 (2)	2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியில் நிதிக் கூற்றுக்களில் 2 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளடக்கப்பட்டிருந்த செலுத்தப்பட வேண்டிய வைப்புக்களின் மீதியான ரூ. 30,404,624 பெறுமதியை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2020 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆந் திகதி 02/2020 ஆம் இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை	ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு மாறாக பணிப்பாளர் நாயகம் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் சம்பளங்களும் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டிருந்த காரணத்தினால் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு சம்பளங்கள் மற்றும் தொழில்சார் கொடுப்பனவுளாக மொத்தம் ரூ. 694,000 தொகை அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், உற்பத்திதிறன் மிக்கதாகவும் குறித்த காலப்பகுதியில் சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகையை மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என்றும்,

2.3 **ஏனைய விடயங்கள்**

(அ) 2015 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 111 மடிக்கணனிகளை கடமை தேவைப்பாட்டுக்கு அன்றி பதவியின் தன்மையை கருத்தில் கொள்ளாமல் 103 உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் சொந்தப் பெயரில் வழங்கப்பட்டிருந்தன. 04 உத்தியோகத்தர்களுக்கு 02 கணனிகள் வீதமும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 03 கணனிகள் வீதமும் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்பட்டது.

(ஆ) அதிகாரசபையின் அச்சு நடவடிக்கைகளுக்காக 11 பேர் கொண்ட பணிக்குழுவும், ரூ. 10,923,635 பெறுமதியான இயந்திர உபகரணங்களுடன் வேறொரு அச்சுப் பிரிவொன்றை ஸ்தாபித்து இருப்பினும், மீளாய்வாண்டில் அச்சுப் பணிக்காக ரூ. 9,134,700 வெளித் தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ஒரு வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதியிலிருந்து காணப்படும் ரூ. 12,612,299 பெறுமதியான கடன்பட்டோர் மீதியும், ரூ. 10,093,619 கடன்கொடுத்தோர் மீதியும், 5 வருடங்களுக்கு மேலான கடன்பட்டோர் தொகையான ரூ. 31,396,431 ஐயும் கடன்கொடுத்தோர் தொகையான ரூ. 3,348,035 ஐயும் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பலநோக்கு அபிவிருத்தி படையணி திணைக்களத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 100,000 வேலையற்றோர்களுக்கு பயிற்சியளிக்கும் கருத்திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ரூ. 100,835,305 செலவில் எதிர்பார்க்கப்பட்ட வேலையற்றோர்களுக்கு வேலைக்கான பயிற்சியை நூற்றுக்கு 35 வீதம் அதாவது 34,660 பேருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. இக் கருத்திட்டத்தற்காக 2021 ஆம் ஆண்டில் ரூ. 4,650,800 செலவில் தகவல் முறைமையொன்றை ஸ்தாபித்து இருப்பினும், இதன் ஊடாக வேலையற்றோர்களை வேலையில் ஈடுபடுத்தல் தொடர்பான தகவல்களை பெறமுடியாமல் இருந்தது.

(உ) முன்னரான அறிவு மதிப்பீட்டு முறையில் (RPL) 5000 சான்றிதழ்கள் வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டில் மாத்தறை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட திறன்களுக்கான முடிசூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தில் நிகழ்ந்த முறைகேடுகள் தொடர்பாக நடைபெற்ற விசாரணைக்கான பரிந்துரைகள் 2023 ஆம் ஆண்டு வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கைத்தொழில் ஒத்துழைப்பு பயிலுநர் பயிற்சி மத்திய நிலையத்தின் கீழ் (Higher Diploma in Digital Technician) கற்கைநெறிகளுக்கான ஆய்வுகூடமொன்றை ஸ்தாபிப்பதற்காக 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆந் திகதி சீனா தூதரக அலுவலகத்தினால் ரூ. 10,099,202 பெறுமதியான 84 உருப்படிகள் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதியிலும் டிப்ளோமா கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கும் கணனி ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தொழிற் பயிற்சியை பெறும் மாணவர்களுக்கு மாணவர் உதவிக் கொடுப்பனவுக்காக கல்வி அமைச்சினால் வழங்கப்படும் ஒதுக்கங்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கான முறையான வேலைத்திட்டமொன்று இன்மையால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அதிகார சபைக்கு வழங்கியிருந்த ரூ. 55,266,600 தொகையில் ரூ. 10,279,600 தொகையை மாணவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் நடைமுறை கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஐ) துறைசார்ந்த திறன் அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் மூலதனச் செலவுகளை ஏற்றுக்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெறப்பட்ட ரூ. 62,789,505 இனை குறித்த நோக்கத்திற்காக செலவிடாமல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஒ) தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி அதிகார சபையை நிறுவும் நோக்கத்தில் இருந்து விலகி ஆட்களை வெளிநாட்டு தொழில்களுக்கு அனுப்புவதற்கு 2022 ஆம் ஆண்டில் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் NAITA Foreign Employment (Private) Limited எனும் பெயரில் கம்பனி ஒன்றை தாபித்து வெளிவாரி ஆட்களிடம் ரூ. 1.2 மில்லியன் பணத்தை பெற்றுக் கொண்டிருப்பினும், 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆந் திகதி வரையில் ஒருவரைக்கூட வெளிநாட்டு தொழில்களுக்காக அனுப்பவில்லை. இக் கம்பனியின் வருவாய் மற்றும் செலவினங்கள், கட்டுப்பாட்டு கணக்கின் மூலம் அதிகார சபையின் பிரதான வங்கிக் கணக்கின் மூலமாக மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு இக் கட்டுப்பாட்டு கணக்கின் மீதி ரூ. 608,385 ஆக இருந்தது. இக் கம்பனி முழுமையாக இயங்காத நிலைமையில் காணப்பட்டாலும் 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு தொழில் முகவர் பத்திரத்தை புதுப்பிப்பதற்காக ரூ. 224,000 தொகையை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு செலுத்தியிருந்தது.

டப்ளியூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி